Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 12 புதன்கிழமை (26.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 176

# "நவி"யின் அறிக்கை ஜெனிவாவில் இன்று விவாதம்



(ஜெனிவா)

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் அறிக்கை தொடர்பாக இன்று ஜெனிவாவில் விவாதம் இடம்பெறவுள்ளது.

அதேவேளை நவிப்பிள்ளையின் அறிக்கை தொடர்பாக இலங்கைப்பிரதிநிதிகளின் கருத்துப்பகிர்வும் விளக்கவுரையும் இன்றையதினமே இடம்பெறவுள்ளது.

அனைவராலும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்துள்ள அறிக்கை தொடர்பில் விரிவான விவாதம் இன்று இடம்பெறும்.

ஜெனிவா நேரப்படி முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரை இந்த விவாதம் இடம்பெறவுள்ளதுஇதன்போது அரசாங்கப் பிரதிநிதிகளால் தமது சார்பு கருத்துக்கள் மற்றும் விளக்கவுரைகள் என்பன முன்வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தொடர்பான அமெரிக்காவின் யோசனை நாளை முன்வைக்கப்படவுள்ளது. இந்த நிலையில் 25 ஆவது அமர்வில் அமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள இந்த யோசனையின் புதிய திருத்தத்தின் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு வருட கால சர்வதேச விசாரணைக் காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது

(19) ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆம் திருத்தம் மூலமாகவே தீர்வு

### அமெரிக்காவும் இதை உணர்ந்துள்ளது



(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கான சரியான தீர்வை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மூலமாகவே மேற்கொள்ள முடியும் என்று அமெரிக்காவும் ஜெனிவாவும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எமது பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது திருத்தத்தையே ஆரம்பமாகக் கொள்ளவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வந்தோம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொய்யானதும், நிறைவேற்ற முடியாததுமான வாக்குகளை மக்களிடம் வழங்கி தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் தேர்தல் காலங்களின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாது மக்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா பிரேரணை தமிழர்களுக்கு உதவாது

### அதை ஏன் ஆதரிக்கவேண்டும்



ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை வலுவற்றது. அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் வந்துவிடப் போவதில்லை. -இப்படிக் கூறுகிறார் தமிழக முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச் செயலருமான ஜெயலலிதா. தமிழகத்தின் பொதுத் தேர்தல் பிரசாரத்தையொட்டி பொதுக் கூட்டங்களில் பேசி வரும் ஜெயலலிதா திண்டுக்கல் உட்பட சில இடங்களில் பேசும் போதே இப்படிக் கூறியிருக்கின்றார்.

அவர் மேலும் கூறியதாவது, இலங்கையில் மனித உரிமைகள் பிரச்சினை யுத்தம் முடிந்த பின்பும் தொடர்கின்றது. அவர்களின நிம்மதியான வாழ்வுக்கு இந்திய மத்திய அரசு எதுவும் செய்யவில்லை ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து இப்போது கருணாநிதி உருகுகின்றார். ஆனால் தமது ஆட்சிக் காலத்தில் அதிகாரம் இருந்தும் தட்டிக் கேட்க அவருக்குத் துணிவிருக்கவில்லை. மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியுடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில் இளைஞர் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் புனர்வாழ்வளிக்கப்படாத முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பயங்கரவாதத் தடுபபுப் பிரிவினரால் இவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றம் அருகில் வெடிகுண்டு

யாழ்ப்பாணம், குருநகர் சிறுவர் நீதிமன்றத்திற்கு அண்மையில் உள்ள சனசமூக நிலையத்துக்கருகில் பயன்படுத்தப்படாத காணிக்குள் இருந்து நேற்று மாலை கைக்குண்டு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,நேற்றுமாலை அப்பகுதிக்கு அருகில் சிறுவர்கள் பந்து விளையாடிக்கொண்டிருந்த போது பந்து குறிப்பிட்ட காணிக்குள் சென்றுள்ளது. பந்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வாள் சகிதம் காத்திருந்த "ஆவா" உறுப்பினர் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸாரினால் 'ஆவா' குழுவைச்சேர்ந்த மேலும் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குவில் பிறவுண் வீதியில் ஆட்டோ ஒன்றுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த இணுவிலைச் சேர்ந்த ஒருவரை இராணுவத்தினர் சோதனை

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் வருகிறார் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர்

சிங்கப்பூர் வெளியுறவுத் துறை அமைச்சர் கே. சண்முகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார். 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அவர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்து இங்குள்ள நிலைவரங்கள் குறித்துப் பார்வையிடவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கில் வெப்பநிலை உச்சம் இரு வாரங்கள் தொடரும்

(யாழ்ப்பாணம்)

தற்போது காணப்படும் வெப்பமான காலநிலை அதிகரிக்கக் கூடிய நிலை காணப்படுவதாக யாழ். வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி பி. பிரதீபன் தெரிவித்தார்.

மத்திய கோட்டில் சூரியன் உச்சம் கொடுத்துள்ளது. கடந்த மார்ச் 23ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 14,15ஆம் திகதிவரை சூரியன் மத்தியகோட்டில் உச்சம் கொடுப்பதால் வெப்ப

(19) ஆம் பக்கம் பார்க்க

## வட்டுக்கோட்டையில் கைதானவர் கொழும்புக்கு

வட்டுக்கோட்டையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாத்தீர்மானத்தை அமுலாக்குவது அவசியமில்லை

### பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எந்தத் தீர்மானத்தினையும் பின்பற்றவேண்டிய அவசரம் ஒரு ஜனநாயக அரசுக்கு கிடையாது என்றும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சியே ஜெனிவாவில் இப்போது இடம்பெறுவதாகவும் எமக்குத் தெரிகின்றது. இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை குறித்து கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சியே ஜெனிவாவில் இடம்பெறுவதாக எமக்குத் தெரிகின்றது. இது குறித்து தெளிவுபடுத்துவதற்கு எனக்கு சந்தர்ப்பத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாம் அரசுடன் பேசுவது என்றால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும்

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக எதிர்காலத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்றால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மிகவும் அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இன்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என்றும் எவ்விதமான . முன் நிபந்தனைகளும் விதிக்காவிட்டால்

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 6–8வரையான மாணவர்களுக்கான ஆங்கில பாட பயிற்சி

11



அரசியலுக்கு கும்பிடு

18



ஒபாமா சீற்றம்

# மணவாளக்கோல விழா

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மணவாளக் கோல விழா எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் மண வாளக் கோல விழாவில் 108 திரவிய ஹோமம், 108 திரவிய அபிஷேகம் 108 பாற்குட அபிஷேகம் நடைபெற்று மாலை 5 மணியளவில் விநாயகர் எழுந்தருளி உள்வீதி வெளிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் 108 பாற்குடப வணி நடைபெறவுள்ளதால் பாற்குட பவனியில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (11)

# மாநகர சபை செயற்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்வு

## புதிய திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தி லுள்ள பொது மலசலகூடங்களின் சுத்தம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக, குறித்த மலசல கூடத்தை மட்டுமல்லாது பேருந்து நிலைய வளாகத்தினதும், நகரின் ஏனைய பகுதிகளினதும் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் யாழ்.மாநகரசபை கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் நாளாந்தம் பெருமளவிலான மக்கள் பேருந்து நிலையத்திற்கு வருகை தருமிடத்து மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், பருத்தித்துறை வீதி,ஆரியகுளம் பகுதியில் தனியார் பேருந்து நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்ட போது மக்களதும் வாகனங்களினதும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் குறித்த பேருந்து நிலையம் நவீன வடிவமைப்புடன் அமைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இதனிடையே சத்திரச்சந்திப் பகுதியில் புதிதாக பொருத்தப் பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்குகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர்,மக்கள் பழக்கப்படும் வரையில் பொலிசாருடனும், வீதி அபிவிருத்தி திணைக்களத்துடனும் கலந்துரையாடி மக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மாநகரசபையினருக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், நகரப்பகுதியில் மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஏனைய பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



இதன்போது ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# சைக்கிள்கள் திருடிய குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்



(வடமராட்சி)

சைக்கிள் திருடிய குற்றச்சாட்டின் பெயரில் அச்சுவேலி வடக்கை சேர்ந்த குடும்பஸ்தர் (வயது-61) ஒருவர் கடந்த 23 ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆயர்ப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

செல்வச்சந்நிதி ஆச்சிரமத்தில் ஒரு சைக்கிளும் அச்சுவேலியில் 2 சைக்கிள்களும் திருடிய குற்றச்சாட்டின் பேரில் உடுப்பிட்டிச் சந்தியில் வைத்து இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆயர்ப்படுத்தப் பட்டுள்ளார் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (116)

# கண்ணகி அம்மன் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-தெக்கணம்பாய் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது.

வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, வாஸ்துசாந்தியை தொடர்ந்து உற்சவம் ஆரம்பமாகிமுதலாம் நாள் சிங்கவாகனக் காட்சியும், இரண்டாம் நாள் யானை வாகனக் காட்சியும், மூன்றாம் நாள் பழமைமிக்க குதிரைவாகனக் காட்சியும், நான்காம் நாள் மயில் வாகனக் காட்சியும், ஐந்தாம் நாள் இடப வாகனக் காட்சியும், ஆறாம் நாள் கமதேனு வாகனக் காட்சியும், ஏழாம் நாள் சர்ப்பவாகனக் காட்சியும், எட்டாம் நாள் சப்பறத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் மாலை 4 மணிக்கு தேர் உற்சவம், பத்தாம் நாள் மாலை 5 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவத்துடன் சிங்க வாகனக் காட்சியும் இடம்பெறும்.


## சிறு விளம்பரம்

டயான பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை

இல.6 கனகசபை லேன்
சிவலிங்கப் புளியடி
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.
0212228680, 0775925088

(C/3376)


# முதியவர்களுக்கு சிற்றுண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட விஞ்ஞான பீடத்தில் பயிலும் சிங்கள மாணவர்கள் இருபதுபேர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள சுமார் இருநூறு முதியவர்களுக்கு சிற்றுண்டி வழங்கி உபசரித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி ஒரு மணி முதல் முதியவர்களுக்கு சிற்றுண்டி வழங்கியதுடன் அவர்களுடன் அன்பாக அளவளாவியும் மகிழ்ந்தனர். மாஸ்மலேஸ், கேக், பழங்கள், ரொபி மற்றும் பல பொருட்களைப் பொதிகளில் வைத்து மாணவர்கள் முதியோர்களுக்கு வழங்கினர்.

சகோதர இனத்தவரான இச் சிங்கள மாணவர்களின் தாராள சிந்தனையையும், தங்கள் மீது கரிசனை கொண்டு இச் சிற்றூண்டிகளை அன்பளிப்பு செய்த மைக்காகவும் இச் சிங்கள மாணவர்களைத் தாம் நன்றியுடன் நினைவு கூருவதாக இலலதில் தங்கியுள்ள முதியவர்கள தெரிவித்துள்ளனர். (137)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1045

திகதி 24.03.2014

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

02 19 21 40 R

ஜக்பொட் பரிசு ரூ. 2,52,21,400/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,52,21,400/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 250 | 1,000/= | ரூ. 2,50,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 486 | 1,000/= | ரூ. 4,86,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11772 | 60/= | ரூ. 7,06,320/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6143 | 40/= | ரூ. 2,45,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154342 | 20/= | ரூ. 30,86,840/= |
| ஆங்கில எழுத்து | 22488 | 20/= | ரூ. 4,49,760/= |
| | | மொத்தம் ரூ. | 65,74,640/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| [illegible] | 605963004-5-45 |
| புத்தளம் | 605964763-2-12 |
| [illegible] | 605968261-7-17 |
| கொழும்பு | 605960775-8-08 |
| காலி | 605965634-0-00 |
| மாத்தறை | 605963994-3-13 |
| களுத்துறை | 605971836-1-21 |
| பொலன்னறுவை | 605965026-0-00 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,74,640/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 25,523,460/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.03.27 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: [illegible]

(C/3357)


# உடுப்பிட்டி சந்தையில் கடை உடைத்து திருட்டு

## பொலிஸார் விசாரணை



(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சந்தையின் உட்புறப் பகுதியில் அமைந்திருந்த பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன் தினம் இரவு உடைக்கப்பட்டு நான்கு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

சிவப்பிரகாசம் கிருபாகரன் என்பவரின் வர்த்தக நிலையமே உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக நிலையம் ஏற்கனவே 3 தடவைகள் உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளதுடன் ஒரு தடவை தீயிட்டு எரிக்கப்பட்டும் உள்ளது.

கரவெட்டி பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் இச்சந்தைக்கு கடந்த 10 வருடங்களாக காவலாளி எவரும் நியமிக்கப்படாததால் இவ்வாறான பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

# மாணவருக்கு காசநோய்த்தாக்கம் சிகிச்சை வழங்க நடவடிக்கை

## வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர் மத்தியில் காசநோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களை இனம் கண்டு அவர்களுக்கான சிகிச்சை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற சர்வதேச காசநோய் தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இனம் காணப்படாது பல காச நோயாளர்கள் எமது சமூகத்தில் இருக்கிறார்கள். இதனால் அது பிறருக்கும் தொற்றிக் கொண்டு போகின்றது. இது ஒரு பொது சுகாதார பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. இலங்கையில் தற்போது இந்நோயுள்ள 4 ஆயிரம் பேர் இனம் காணப்படாது இருக்கிறார்கள்.

அவர்களில் யாழ்.மாவட்டத்திலும் பலர் இருக்கிறார்கள். அவர்கள் இனங்காணப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல். இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தரவுகளின் படி 2011 இல் 13 பேராக இருந்து 2013 இல் 15 பேராக அதிகரித்துள்ளது. இதனடிப்படையில் பாடசாலை மாணவர்களுக்கு தனியே காசநோய் பரிசோதனை அல்லாது மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். முன்னர் காசநோய் என்றால் மயிலிட்டியில் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள் 6 மாதங்களின் பின்னர்தான் திரும்பலாம்.

ஆனால் இப்போது அப்படியான நிலை இல்லை நவீன வசதிகளும் மருந்துகளும் உள்ளன. இனம் காணப்பட்ட ஒருவர் முறையாக மருந்து எடுத்தால் 2 வாரத்தில் காசநோய் பிறருக்கு பரவுவதை தடுக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இன்றைக்கு காசநோயாளர்கள் புறம் தள்ளப்படுகின்ற நிலை இருக்கின்றது. குறிப்பாக இளம் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படின் எதிர்கால வாழ்க்கையே பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

ஆனால் இன்றைய நிலையில் இவ்வாறு இருக்கக் கூடாது. நோய்க்கான சிகிச்சைகளை உரியமுறையில் பூரணமாக மேற் கொண்டால் இந்நோயினைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்றார். (இ)

# நேரத்தை தவறாக காட்டும் மணிக்கூட்டுக் கோபுரம்

(வவுனியா)

வவுனியா புளியங்குளத்தில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரம் சரியான நேரத்தைக் காட்டாத நிலையில் பல மாதங்களாக இயங்கிக் கொண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

இந்த மணிக்கூட்டுக் கோபுரம் தனியார் நிறுவனம் ஒன்றின் பராமரிப்பில் உள்ளதாகவும் இது தொடர்பாக அந்த தனியார் நிறுவனத்துக்கு பலதடவை தெரியப்படுத்தியிருந் தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் சரியான நேரம் காட்டப்படாததால் அப்பகுதியால் பயணம் செய்யும் மக்கள் நேரத்தை அறிந்து கொள்ள முடியாதுள்ளதாக கவலை தெரி வித்துள்ளனர்.

# போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறையிலிருந்து மன்னாருக்கு நேரடி பேருந்து சேவைகள் எதுவுமின்மையால் வடமராட்சிப் பிரதேச மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து பூநகரி முழங்காவில் உள்ளிட்ட பிராந்தியங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் யாழ்ப்பாணம் சென்றே மன்னாருக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி, சங்குப்பிட்டி, பூநகரி வழியாக மன்னாருக்கான பேருந்து சேவையொன்றை அரச, தனியாரோ ஆரம்பிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும் என பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி, பல்லவராயன் கட்டு, உள்ளிட்டபகுதிகளிலும் மன்னார் மாவட்டத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பயணத்தை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (109)

# கரையோர கடற்றொழிலாளர்கள் வீதியை மாசுபடுத்தி வருகின்றனர்

## குருநகர் பகுதிமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

குருநகர் 5 மாடி கட்டடங்கள் அமைந்துள்ள கடற்கரையோர வீதி கரையோர கடற்றொழிலாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களால் மாசுபடுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரையோர கடற்றொழிலாளர்கள் தாம் பிடித்த இறால், நண்டு, மீன்வகைகள் இந்த வீதியில் போட்டு பரப்பிவிட்டு தமக்கு தேவையானதை எடுத்துக்கொண்டு மிகுதியாக உள்ள கடற்பாசி,சாதாளை மற்றும் பேத்தை போன்ற கழிவுகளை வீதிகளில் விட்டுவிட்டுச் செல்வதனால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி அந்த வீதியால் பயணிப்போரின் துவிச்சக்கர உந்துருளியையும், பாதசாரிகளின் பாதங்களையும் கடலுணவு முட்கள் குத்தி சேதமாக்குவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர். அதேவேளை கடலை மறித்துக் கட்டியுள்ள கடற்கரை நீரில் தகரம், போத்தல், ஓடுகள் குப்பை கூழங்களை வீசுவதனால் கடற்கரைகளில் இறங்குவோரின் கால்களை அவை வெட்டிக் காயப்படுத்துவதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவித்தனர்.

இதற்கான மாற்று நடவடிக்கைகளைக் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (68)




மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? - II

# மகிந்தவை பூச்சாண்டியாக காட்டி வருவதால் மட்டும் எல்லாம் சரியாகி விடுமா?

பஸ்ஸில், சந்தையில்,
கடைத்தெருவில், ஆஸ்பத்திரியில்,
வேலை செய்யும் இடங்களில்,
கள்ளுக்கடைகளில் அல்லது
சாராயத் தவறணைகளில்,
பல்கலைக்கழகங்களில், எதிர்
அரசியல்வாதிகளிடத்தில், உள்நாட்டில், இந்தியாவில், ஐ.நா.வில், புலம் பெயர்ந்தவர்களிடத்தில், அமெரிக்காவில், ஐரோப்பாவில், மனித உரிமைகள் அமைப்புகளில் மற்றும் உலகின் பல பாகங்களிலும் என எங்கே பார்த்தாலும் மகிந்த ராஜபக்ஷவைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளும் விருப்பங்களும் இருக்கே! அப்படியென்றால், அவருடைய ஆட்சி பிழையான ஒன்று என்றுதானே அர்த்தம் என்று கேட்கிறார் இந்தப் பத்தியின் தொடரின் வாசகர் ஒருவர்.

சந்தேகமேயில்லை. மகிந்த ராஜபக்ஷவின் மீதும் அவருடைய ஆட்சியின் மீதும் பல இடங்களிலும் கசப்பும் அதிருப்தியும் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இது மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல, எந்த ஆட்சியாளர்மீதும் ஏற்படும் ஒன்றுதான். ஆட்சியில் இருப்பவர்கள் எதையெல்லாம் செய்யத் தவறுகிறார்களோ, எதையெல்லாம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்களோ, அதெல்லாம் மக்களைக் கசப்படைய வைக்கின்றன. இந்தக் கசப்பையே எதிர்த்தரப்பினர் தங்களுக்கான வாய்ப்பாக, அரசியல் மூலதனமாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

முடிவற்று நீண்டிருந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்ததை விட, அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த முறையால், மகிந்த ராஜபக்ஷ கடுமையாக விமர்சிக்கப்படுகிறார். மகிந்த ராஜபக்ஷ மீதான ஒரு சாராரின் குற்றச்சாட்டு இதுவாக இருக்கிறது.

இன்னொரு சாரார் வேறு விதமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். போரை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த, தமிழ் பேசும் சமூகங்களுக்கான அரசியற் தீர்வை முன்வைத்திருக்க வேண்டும். அவர்கள் மனதிலிருக்கும் கலவரத்தை நீக்கியிருக்க வேண்டும் என்று.

ஆனால், அவர் அப்படிச் செய்யாமல், மேலும் அந்தச் சமூகங்களை அச்சமூட்டும் விதமாகவே நடந்து கொள்கிறார். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினரின் மனங்களைக் காயப்படுத்தும் விதமாக அண்மையில் நடந்து வரும் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் தொடக்கம் பல நிகழ்ச்சிகள் இதற்கு ஆதாரம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த, போருக்குப் பிந்திய நிலைமைகளைச் சீர்செய்வதில் – பொருளாதார ரீதியில் நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்புவதில் பின்தங்கி விட்டார் என்று இன்னொரு பக்கத்தில் பலமான குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர் இன்னொரு சாரார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அப்பால், வலுவான எதிர்ப்பு ஒன்று மகிந்த ராஜபக்ஷவின் மீது உள்ளது. அந்த எதிர்ப்பே மற்ற எல்லாவகையான குற்றச்சாட்டுகளையும் பலமாக்குகின்றன.

அந்த எதிர்ப்பு, மேற்குலகின் நலன்களுக்கு ஒத்திசைந்து போகாமல் மகிந்த ராஜபக்ஷ முரண்பட்டுக் கொண்டிருப்பதேயாகும்.

தன்னுடைய நிகழ்ச்சி நிரல்களுக்குக் கட்டுப்படாத நிலையைச் சகித்துக் கொள்ளாத மேற்குலகம் மகிந்த ராஜபக்ஷவை கடுமையான நெருக்கடிக்குள்ளாக்குகிறது. அப்படி நெருக்கடிக்குள்ளாக்குவதற்காக அது உள்நாட்டிலும் பிற மையங்களிலும் மகிந்த ராஜபக்ஷ அரசின் மீதான குற்றச்சாட்டுகளையும் குறைபாடுகளையும் வாய்ப்பாகப் பயன்படுத்துகிறது.

அதாவது, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது பல மையங்களிலும் காணப்படும் அதிருப்தியை எதிர்ப்பு வடிவமாக்கி, இலங்கை அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்க விழைகிறது.

இந்த எதிர்ப்பே, மகிந்த ராஜபக்ஷவைக் கவிழ்க்க வேண்டும் என்ற உணர்வலையை எங்கும் உருவாக்கியுள்ளது.

இதற்கான வாய்ப்பைத் தன்னுடைய எதிர்த்தரப்புகளுக்கு மகிந்த ராஜபக்ஷவும் அளித்துள்ளார். தொடர்ந்தும் அப்படி அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவே அவர் நடந்து கொண்டுமிருக்கிறார்.

இது அவரின் மீது மேலும் மேலும் எரிச்சலை ஊட்டுகிறது. இந்த எரிச்சலுணர்வே மகிந்தவைக் கவிழ்க்க வேணும் என்ற ஆவேசத்தை உண்டுபண்ணுகிறது.

ஆனால், ஒரு ஆட்சியைக் கவிழ்ப்பது என்பது அத்தனை எளிதான விசயமல்ல.

இதிலும் இனவாதத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள சிங்கள ஆட்சி மையத்தை எந்தப் பீரங்கிகளாலும் இலகுவாகச் சரித்து விட முடியாது.

மகிந்தவைக் கவிழ்ப்பதற்காக இப்படிப் பலரும் முயற்சிக்கும்போது சிங்கள மக்கள் அவரைப் பாதுகாக்கவே முயற்சிக்கிறார்கள். மகிந்த ராஜபக்ஷவின் பலமே சிங்கள மக்களிடத்தில்தான் உள்ளது.

சிங்கள மக்களை யார் தம் வசப்படுத்துகிறார்களோ, அவர்களால் மட்டுமே மகிந்தவைக் கவிழ்க்க முடியும்.

ஆனால், அப்படியான எண்ணமோ சிந்தனையோ எந்தப் புடுங்கிகளிடமும் இல்லை. அவர்களெல்லாம் ஒரு மரத்தின் வேர்களை வெட்டுவதற்குப் பதிலாக கிளைகளைக் கிள்ளியெறிவதிலேயே கரிசனையாக இருக்கிறார்கள்.

காகம் திட்டி ஒரு போதும் மாடு சாவதில்லை.

வாழ்க்கை பல கேள்விகளையும் பதில்களையும் கொண்டது: எப்பொழுதும் அது பௌர்ணமியாக இருப்பதில்லை, அமாவாசையும் வரத்தான் செய்யும். ஹோமர

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மனங்களை ஆற்றுப்படுத்தும் கலை!

நாளை உலக நாடக தினம். இலக்கியம், கவிதை, இசை, நடனம், ஓவியம் ஆகிய பல கலைகளின் சங்கமமாக விளங்கும் இந்த நாடகக் கலையின் சிறப்புகளை வெளிப்படுத்தி பிரபலப்படுத்தும் விதமாக, 1962 மார்ச் 27 முதல் இது உலகமுழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆடல், பாடலுடன் கதையைச் சொல்வது என்பதாகவே மனித வாழ்க்கையில் நாடகம் தோற்றம் பெறுகிறது. தன்னுடைய மனத்தின் நுண்ணிய சலனங்களையும், அழகுணர்வுகளையும் இவைகளின் மூலமாகவே மனிதன் அடையாளம் கண்டு வந்திருக்கிறான். தன்னுடைய சுதந்திரத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி வந்திருக்கிறான்.

குழுச் செயல்பாடாகவும், அடையாளத்தைப் பேணவும், ஒரு கலாச்சாரப் பகிர்தலுக்கான தளமாகவும் நாடகங்கள் பயன்பட்டிருக்கின்றன. படிப்படியாக நாடகம் காட்சித் திறனும், சுவையும், சமூகப்பாங்கும் கொண்ட ஒரு ஊடகம் என்பது உணரப்பட்டது. இசை மற்றும் நடனப் பின்னணியில் கதை சொல்வது என்பது புலன்களை கிளர்ந்தெழச் செய்யும் ஒரு அனுபவமாகவே காலம் காலமாக தொடர்ந்து வருகிறது.

இதனால் நன்கு பரிச்சயமான தொன்மக் கதைகளும், புராணக் கதைகளும் பலமுறை நிகழ்த்தப்பட்டாலும், அவை எப்படி நிகழ்த்தப்படுகிறது என்பதைக் கண்டு களிக்கவே மக்கள் கூடினர். விடிய விடிய காத்தான் கூத்தையும் மகாபாரத, இராமாயணக் கதைகளையும் சலிக்காமல் திரும்பத் திரும்ப பார்த்தனர்.

நாடகம் சிறு சிறு துகளாக மக்களுடைய வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த ஒரு வடிவம். இன்று சினிமா அசுர வலிமையுடன் ஒரு சேரப் பலரைச் சென்றடையும் அளவுக்குப் பாதிப்புடையதாக இருக்கலாம். ஆனால் நாடகம் நம் கண் முன்னே ஒரு யதார்த்தத்தை, ஒரு கனவை, நாம் இழந்து போன கணங்களை முன் நிறுத்துகிறது.

இன்றுள்ள இயந்திர உலகம் மனிதனின் கற்பனைகளையும், படைப்புச் சக்தியையும் நசுக்கிக் கொண்டிருக்கிறது. நாடகம் அவனுடைய கற்பனைகளை மீட்டெடுக்க முடியும். ஒரு கவிதையை அவனுக்கு வசப்படுத்த முடியும், கற்பனையற்ற அவனுடைய வாழ்க்கையை இன்னும் அதிக கற்பனையுடன் இன்னும் அதிக படைப்பு மனத்துடன் அவன் எதிர்கொள்ள முடியும். அதற்கான ஒரு கலையின் அண்மையை நாடகம் அவனுக்கு வழங்க முடியும்.

ஆரோக்கியமான நாடகக்கலை வளர்ச்சிக்கு சமூக அக்கறை கொண்ட அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். அரசையும் கல்வி மற்றும் கலைசார்ந்த நிறுவனங்களையும் தூண்டி, சில ஏற்பாடுகள் மூலம் நாடகம் தொடர்ந்து சிறப்பாக இயங்க வழிவகைகள் செய்ய முடியும்.

போருக்கு முந்திய நாட்களுடன் ஒப்பிடுகையில் இன்று அவ்வளவாக நாடகங்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும். நம்மை மேலும் மேலும் துக்கமானவர்களாகவும், இழந்தவர்களாகவும், இறுக்கமானவர்களாகவும் நீடித்துக்கொள்வது நமக்குத்தான் நல்லதல்ல. நம்மைத் தளர்த்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த சூழலின் இறுக்கத்தை தளர்த்துவதற்கு கலைகள் தான் உதவ முடியும். குறிப்பாக நாடகங்கள் மக்களுக்கு நேரடிக் கொண்டாட்டத்தை வழங்க வல்லன. பொதுவெளியில் உரையாடல்களை திறக்கவல்ல இப்படியான நிகழ்வுகள் எங்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லும்.

நம் மத்தியில் நாட்கங்கள் மற்றும் வீதி நாடகங்களுக்கு புது எழுச்சி ஊட்டுவோம். நாடகங்கள் மக்களை ஆறுதல்படுத்தும். சமூகத்தின் இறுக்கம் தளர்த்தி நமக்கு புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தும்.

- ஆசிரியர்

# தேர்தலில் பொலிஸார் பக்கச்சார்பு செயற்பாடு

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றச்சாட்டு

பொலிஸார் இம்முறை தேர்தலில் பக்கச்சார்பாக செயற்படுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சில பகுதிகளில் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுகின்றமை குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக கைதுசெய்யப்பட்ட சிலர், பொலிஸாரின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டவிரோத பிரசாரங்களை கட்டுப்படுத்தும் பொலிஸ் உத்தியோகத்தர்களை இம்முறை தேர்தலில் காணமுடியாதுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

சட்டவிரோதமான தேர்தல் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காத பல சம்பவங்கள் பதிவாகியுள்ளது என்றார்.

# நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கு முயற்சி

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். 30 ஆண்டுகள் யுத்தம் இடம் பெற்ற இலங்கையில் தற்பொழுது சமாதானத்தின் நன்மைகள் கிடைக்கப் பெற்றுவருவதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

சில சக்திகள் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலத்தில புலிகள் நாட்டில் மத நல்லி ணக்கத்தை சீர்குலைக்க முயற்சி மேற் கொண்டனர் எனினும் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

தலதா மாளிகை மீதான தாக்குதல், அரந்தலாவை தாக்குதல், காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் போன்ற பல தாக்குதல்களை புலிகள் மேற் கொண்டனர். இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தவில்லை.

2005ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டியிருக்காவிட்டால் முஸ்லிம் தலைவர்களின் நிலைமை என்னவாக இருந்திருக்கும் என்பது தெரிந்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தனக்கான கல்லறைக்கு அடிக்கல் நாட்டினார் அமைச்சர் மேர்வின்

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா பொரள்ளை கனத்தை மயானத்தில் தனக்கான கல்லறைக்கு நேற்றுக் காலை 9 மணியளவில் அடிக்கல் நாட்டினார்.

தனது தாயின் கல்லறைக்கு அருகிலேயே அவர் தனக்கான கல்லறையையும் தேர்ந்தெடுத்து அத்திவார மிட்டார். அதற்கு முன்னர் அங்கு மதவழிபாடுகளும் இடம்பெற்றன.

மறைவுக்குப் பின்னர், தனது சாம்பலை இங்கு அடக்கம் செய்ய வேண்டுமென விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

# நெல்லை தனியார் வர்த்தகர்களுக்கு விற்பதில் விவசாயிகள் ஆர்வம்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கிடைக்கும், பெரும்போக நெல் அறுவடையின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

விவசாயிகள் தனியார் பிரிவு வர்த்தகர்களுக்கு இம்முறை அதிகளவில் நெல்லை விற்பனை செய்துள்ளதாக சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க தெரிவித்துள்ளார். இதன்மூலம் விவசாயிகளுக்கு சிறந்த விலை கிடைத்துள்ளது.

விசேடமாக நெல் அறுவடை செய்ததன் பின்னர், நேரடியாகவே வர்த்தகர்களுக்கு அவற்றை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை, நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள போதிலும், இதுவரையில் பத்தாயிரம் மெட்ரிக் தொன் நெல்லே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அவர் எவ்வாறாயினும், ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், தற்போது காணப்படும் நிலையை கருத்திற்கொண்டால், அதற்கேற்றளவு நெல் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுபலசேனாவிடம் றிசாட் பதியுதீன் 500 மில்லியன் நட்டஈட்டுக் கோரிக்கை

(கொழும்பு)


வில்பத்துவில் மீளக்குடியமர்த்தப்பட்ட முஸ்லிம் மக்கள் தொடர்பில் பொதுபலசேனா அமைப்பினால் தம்மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் போலியானது என்று கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான குற்றச்சாட்டுக்களால் தமக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு நட்டஈடாக 500 மில்லியன் ரூபாவை கோரியுள்ளார்.

இதுதவிர வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை பொதுபலசேனா கைவிடவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் விகிதாசார அடிப்படையற்ற வகையில் மக்களை மீளக் குடியமர்த்தி வருவதாக பொதுபலசேனா அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது குற்றம் சுமத்தியிருந்தது.

வில்பத்து சரணாலயத்திற்கு வடக்காக மொல்லிக்குளம் பிரதேசத்தில் காடுகளை சுத்திகரித்து தற்போது 300இற்கும் அதிகமான குடும்பங்கள் கூடாரங்களில் வசிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




**கேபிள் டிவி பரவலாக வந்தவுடன் இளைஞர்களிடம் எம்டிவி புகழ்பெற்றது. இணையம் பரவலாக வந்தவுடன் இளைஞர்களிடம் 'வைஸ்' புகழ்பெறுகிறது. இளைஞர்களின் ரசனையோ தொழில் நுட்பத்தை விட வேகமாக மாறும் தன்மை கொண்டவை. நேற்று உவப்பாக இருந்தது நாளை உவர்ப்பாகிவிடும்.**

# மக்களின் ஊடகமாக 'வைஸ்' (vice)

பாஸ்டன் பாலா

ஷங்கரின் 'முதல்வன்' திரைப் படத்தில் ஒரே ஒரு பேட்டியில், அதுவும் சில மணித்துளிகளே நீடிக்கக் கூடிய நேர்காணலில், நிருபர் ஒருவர், தமிழக முதல்வரைக் கேள்விகளால் துளைப்பார். இன்றோ, நமது நாடாளுமன்ற உறுப்பினர் முதல் உயர் அதிகாரிகள் வரை யாரை வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். இதைத்தான் 'மக்கள் ஊடகம்' என்கிறார்கள். 'முதல்வன்' படத்தின் நிருபர் புகழேந்தி போல் சாதாரண மக்களை சாதனமாகக் கொண்டு மக்களின் ஊடகமாக 'வைஸ்' (vice) உருவாகி இருக்கிறது. 'வைஸ்' என்பது என்ன?

சுருக்கமாக சொன்னால் இணையத்தளம். துளிர்இளம் பருவத்தினரை குறிவைக்கும் ஊடகம். நிறைய குறும்படங்கள் எடுக்கிறார்கள். ஆங்காங்கே மசாலா தூவுகிறார்கள். அச்சிலும் இலவசமாக விநியோகிக்கிறார்கள். வலையின் அனைத்து சாத்தியங்களையும் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு விஷயத்தை எப்படி நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள்?

ஆதி வழி என்பது செய்தித்தாள் மூலமாக, நேற்றைய நிகழ்வுகளைப் படிக்கலாம். மாலை நேர செய்திகள், தொலைக்காட்சியில் கேட்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் செய்தியின் மூலகர்த்தாவே சமூக ஊடகங்களில் தென்படுவார். அவரிடமே நேரடியாக சென்று 'என்ன விஷயம்?' எனக் கேட்கலாம். ஆதாரம் கோரலாம். அதை எதிர் சாராரிடம் உடனடியாகக் கொண்டு சென்று இரு பக்க உண்மைகளையும் அறியலாம்.

துருக்கியின் இஸ்தான்புல் நகரத்தில் புரட்சி வெடித்த போது இப்படித்தான் டிம் பூல் (Tim Pool) கண்ணும் கமெராவுமாக இயங்கினார். கலகக்காரர்களோ, காவல்துறையோ துரத்தும்போது, கையில் படப்பதிவுக் கருவியை இடுக்கிக் கொண்டு, இன்னொரு புறம் செல்பேசி, ஐபாட் சமாச்சாரங்களை பையில் திணித்துக் கொண்டு நின்று, நிதானமாக 1...2...3... சொல்லிவிட்டு ஓட ஆரம்பிக்க முடியாது அல்லவா! அதனால் கூகுள் கண்ணாடி அணிந்து நிகழ்வுகளைப் பதிகிறார். அவற்றை காற்றலை மூலமாக தன்னுடைய யூ-டியுப் கன்னலுக்கும், 'வைஸ்' சந்தாதாரர்களுக்கும் அனுப்பி வைக்கிறார்.

இந்த மாதிரி ஒவ்வொரு இரத்த பூமியிலும் ஓரிரண்டு டிம் பூல்களை 'வைஸ்' உலவ விட்டிருக்கிறது. இந்த மாதிரி ஆள்களை எப்படி பிடிக்கிறார்கள்?

அமெரிக்காவின் 'ஒக்கியூபை வோல் ஸ்ட்ரீட்' (Occupy Wall Street) போராட்டத்தின் போதுதான் டிம் பூல் தெரிய வந்தார். சி.என்.என்.னும் ஸ்டார் டிவி களும் களத்தில் கலந்து கொள்வதற்கு முன்பே, அந்த நிகழ்வை நேரடியாக ஒளிபரப்பினார். விமானியில்லாமல் ஓடும் விமானத்தை (drone) வாங்கினார். அதன் அடியில் ஒளிக்கருவியை பொருத்தினார். தொலைவில் இருந்து கூட்டத்தை படம் பிடித்தார். முதல் நாள் அன்று பதினேழு பார்வையாளர்கள். இரு நாள் கழித்து எழுநூறாகியது. முதல் மாதம் முடிந்த பிறகு அவரின் காணொளிகளை இரண்டரை இலட்சம் பேர் உலகெங்கும் பார்த்திருந்தார்கள். 36,000 சந்தாதாரர்கள் 700,000 பார்வையாளர்கள் எனப் பெருகிக் கொண்டே வர டிம் பூல்-கள் 'வைஸ்' கண்ணில்பட்டார்கள்.

இந்த மாதிரி 'மாற்றம் வேண்டும்!' எனத் துடிக்கும் இளைஞர் பட்டாளத்தை 'வைஸ்' அமுக்கிப் போடுகிறது. அவர்களுக்குக் கொஞ்சம் காணொளித் தயாரிப்பு நுட்பங்களையும் பொலிஸ்காரர்கள் கண்ணீர்ப் புகை போட்டால் என்ன முதலுதவி செய்ய வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்து உலகெங்கும் அனுப்புகிறது. மற்ற செய்தி நிறுவனங்கள் கடனேயென்று வெளிநாட்டிற்கும் போர்பூமிக்கும் நிருபர்களைத் தள்ளிவிட்டால், 'வைஸ்'காரர்களின் படப்பதிவு நிருபர்கள் வெகு விருப்பத்துடன் கலவரங்களுக்குள் கலக்கிறார்கள். அன்றைய ஆப்கானிஸ்தானில் துவங்கி நேற்றைய சிரியா முதற்கொண்டு, இன்றைய உக்ரைன் வரை நாலாயிரம் நிருபர்களை தன்னகத்தே வைத்திருக்கிறது.

ஆள் கிடைப்பது இருக்கட்டும். இதற்கெல்லாம் மூலதனம் எங்கே சுரக்கிறது?

எண்பதுகளின் இளைஞர்களுக்கு எம்.டிவி. ஆதர்சம். அந்த எம்.டிவி.யில் இருந்து 2006இல் ரொம் ஃப்ரெஸ்டன் (Tom Freston) கல்தா கொடுக்கப்பட்டார். அவருக்கு அந்தக் கால எம்.டிவி போல் இந்தக்காலத் தலைமுறைக்கு ஏதாவது இளமையாக உருவாக்கும் எண்ணம் தோன்றியது. எம்டிவி.யை விட்டு நீங்குவதற்காக தரப்பட்டிருந்த, எண்பது மில்லியன் அமெரிக்க டொலர்களும் தூங்கிக் கொண்டிருந்தது. 1994இல் துவங்கித் தவழ்ந்து, நின்று தட்டுத் தடுமாறி நடக்கத் துவங்கியிருந்த 'வைஸ்' பக்கம் பார்வை திரும்பியது.

இப்போதைய இளசுகளுக்கு கலப்படம் இல்லாத சரக்கு வேண்டும். செய்தியை வாசிக்காமல், கண் முன்னே அப்படியே அப்பட்டமாக நிறுத்த வேண்டும். கொஞ்சம் பிற கேளிக்கைகளும் முகத்திலடித்தது போன்ற பாவனையுடன் வெளிப்படையாக காண்பிக்க வேண்டும். இதையெல்லாம் 'வைஸ்' திறம்படச் செய்து வந்தது.

வயிற்றில் துப்பாக்கி குறி பார்க்கிறது. துப்பாக்கி முனைக்கும் குடலின் தொடக்கத்திற்கும் ஆறு அங்குலம்தான் இடைவெளி.

இடம் - பொகோட்டா, கொலம்பியா.

பொருள் - குண்டு துளைக்காத மேலணி.

தையற்கலைஞர் கற்பூரம் அடித்துச் சொல்கிறார். 'இந்தக் கோட்டைப் போட்டுக் கொண்டிருக்கும்போது உன்னை துப்பாக்கியால் சுட்டால், உனக்கு ஒரு சிராய்ப்புக்கூட வராது'.

'சோதனை செய்திடலாமா?'

'நான் சுடுகிறேன்!'

பார்க்கும் நமக்கோ பதைபதைக்கிறது. டப்... டப்... இரண்டு முறை சுடுகிறார். தள்ளி நின்றால் குறி தவறும் என்று கிட்ட இருந்தே சுடுகிறார். கண்ணை மூடிக் கொண்டுவிட்டேன். திறந்து பார்த்தால், சட்டையைத் தூக்கி அப்பழுக்கற்ற தொப்பையை காட்டுகிறார் சுடப்பட்டவர். போலி குண்டுகள் அல்ல என்பதற்கு சாட்சியமாய் தட்டையான குண்டுகளையும் நினைவுச் சின்னமாக எடுத்துக் கொள்கிறார். இந்த மாதிரி அசல் வாழ்க்கையின் அபத்தங்களை இருக்கை நுனி ஊசலாட்டத்துடன் மீண்டும் மீண்டும், விதவிதமாக 'வைஸ்' படமாக்கிக் காட்டுகிறது. அதைப் பார்க்க யூ-டியுபில் மட்டும் நாலரை மில்லியன் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள்.

**வானொலியை தொலைக்காட்சி மறைத்தது. தொலைக்காட்சியை இணையம் மறக்கடித்தது. இணையத்தை எது மூழ்கடிக்கும்?**

செய்திப்படங்கள் தவிர அச்சு ஊடகத்திலும் 'வைஸ்' காலூன்றி இருக்கிறது. முப்பத்தி நான்கு நாடுகளில் ஒன்றரை மில்லியன் வாசகர்களைக் கொண்டிருக்கிறார்கள். துவக்கத்தில் பதினைந்து நிமிடத் துணுக்குகளாக 'வைஸ்' மூலமாக வெளிவந்த படங்கள் பலவும், முழு-நீள ஆவணப்படங்களாக மாறி இருக்கிறது. வெறுமனே இளைஞர் சமுதாயத்தின் அபிலாஷைகளுக்குத் தீனியாக மட்டும் இல்லாமல், அதன் மேற்சென்று, விவகாரங்களின் ஆழத்தை முழுமையாக அலசும் விதத்தில் அமைந்திருப்பதாலும், எங்கிருந்தோ உட்கார்ந்து கொண்டு அலசாமல், களத்திற்கு சென்று வந்தவர்களின் உண்மை அனுபவங்களாக இருப்பதாலும், இந்த ஆவணப்படங்கள் நேர்மையாகவும் செழுமையாகவும் இருக்கிறது. எனவே, அவை விருதுகளும் பெறுகிறது.

சென்ற ஆண்டில் அவர்கள் செய்த தலைப்புகளில் சில... சூடான் நாட்டின் டர்ஃபர் நகரத்தில் நடந்த உள்நாட்டு கலகம் குறித்த தொடர், கத்ரீனா சூறாவளிக்குப் பின் பாதிக்கப்பட்டோரின் அனாதரவான நிலை குறித்த அலசல், ஃபிலிப்பைன்ஸ் நாட்டில் கழிவுகள் கொட்டும் இடம் குறித்த துப்புத் துலக்கல், கனடாவின் ஆல்பெர்ட்டாவில் இருந்து எண்ணெய் எவ்வாறு சுற்றுச்சூழலை சீரழிக்கிறது என்பது குறித்த ஆய்வு... அதே சமயம் நிர்வாண அழகிகளின் பேட்டி என்றும், பூனைகளின் புணர்ச்சி வாழ்க்கை என்றும், கவர்ச்சிகரமான விஷயங்களுக்கும் குறையில்லை. இந்தக் கலவைதான் இளைஞர்களை இழுக்கிறது.

அதை விட முக்கியமாக இணையத்தில் வருவதை நம்ப முடியாது. 'போர்க்களத்தில் இருந்து நேரடியாக' என்று சொல்லிவிட்டு, வீட்டிலேயே இருந்து கொண்டு வரைகலை வல்லுநர் உதவி கொண்டு மாயாஜாலம் நிகழ்த்துவோர் எக்கச்சக்கம். கொடுக்கப்பட்ட காணொளி நிஜமாகவே சம்பந்தப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்டதா என்பதை சோதிக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக இந்தக் காணொளி இட்டுக்கட்டியதா என்று ஆராய வேண்டும். அதற்கான அத்தாட்சிகளைக் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் 'வைஸ்' செய்து, நம்பகத்தன்மையைக் கொடுக்கிறது. அதற்காகவும் 'வைஸ்' கொண்டாடப்படுகிறது.

ஒருவர் மட்டுமே சொல்லி பலருக்குத் தெரிய வந்தால் அது பழைய ஊடகம். டிவியில் வரும் செய்திகள் மூலமாக அனைவரும் அறியத் தருவது பழைய ஊடகம். பலர் சொல்லி அதன் மூலம் பலர் பயனடைந்தால், அது 'புதிய ஊடகம்'. அங்காடியில் துப்பாக்கிச் சூடு நடக்கிறது எனத் தெரிய வருகிறது. ட்விட்டரில் அதை செய்தியாக அங்காடியினுள் சிக்கி இருக்கும் பெண்மணி தன் தோழர்களுக்கு நிலைத்தகவல் இடுகிறார். அந்த நிலைத் தகவலைத் தொடர்ந்து இன்னொருவர் நேரடி ஒளிபரப்பாக காணொளியைக் கொடுக்கிறார். பலர் மூலமாக பலருக்கு உடனடியாக செய்திகள் சென்றடைகிறது. இது 'புது ஊடகம்'.

'புது ஊடக'த்திற்கும் பழைய பிரசுரங்களுக்குரிய எல்லாப் பிரச்சினைகளும் உண்டு. அரசு சிலவற்றை தணிக்கை செய்யக் கோரும். சில நாடுகளில் தடை செய்யப்படுவீர்கள். ஆவணப்படத்தை ஆட்சியாளர்களுக்குப் பிடித்த மாதிரி கத்தரிக்க கட்டளை பிறக்கும்.

கேபிள் டி.வி பரவலாக வந்தவுடன் இளைஞர்களிடம் எம்.டிவி புகழ்பெற்றது. இணையம் பரவலாக வந்தவுடன் இளைஞர்களிடம் 'வைஸ்' புகழ்பெறுகிறது. இளைஞர்களின் ரசனையோ தொழில்நுட்பத்தை விட வேகமாக மாறும் தன்மை கொண்டவை. நேற்று உவப்பாக இருந்தது நாளை உவர்ப்பாகிவிடும்.

இந்தப் பிரச்சினைகளினால் 'வைஸ்' தாக்குப்பிடிக்காமல் காணா மல் போகலாம். ஆனால், 'வைஸ்' கட்டமைத்திருக்கும் விஷயங்கள் சாஸ்வதமாக நிலைத்திருக்கப் போகின்றன.

முதலாவது, 'மக்கள் ஊடகம்'. நீங்களும் நானும் பக்கத்து வீட்டுக்காரியும் இனி நிருபர்கள். இவர்கள் படம் பிடிப்பதே வேத வாக்கு.

இரண்டாவது, வானொலியை தொலைக்காட்சி மறைத்தது. தொலைக்காட்சியை இணையம் மறக்கடித்தது. இணையத்தை எது மூழ்கடிக்கும்? அது தெரியாது. ஆனால், கன்றுகளும் கருக்குகளும் விளம்பரதாரர்களின் செல்லங்களாக

# ரவி கருணாநாயக்கவின் கோரிக்கை நிராகரிப்பு



(கொழும்பு)


பிரதித் தலைவர் பதவியை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரியுள்ளார.

எனினும் இந்தக் கோரிக்கையை கட்சித் தலைமைத்துவம் நிராகரித்துள்ளது. குறிப்பாக தலைமைத்துவ பேரவை இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

பிரதித் தலைவர் பதவியை தமக்கு வழங்குமாறு ரவி கருணாநாயக்க, ரணிலிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அந்தக் கோரிக்கையை கரு ஜயசூரியவின் ஊடாக தலைமைத்துவ பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் பூர்த்தி

## சட்டதிட்டங்களை மீறினால் நடவடிக்கை



(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் இன்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது.

தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கமைய தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பிலான வர்த்தக விளம்பரங்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைகள், கடிதங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றை பிரசுரிப்பதற்கும், ஒலி, ஒளி பரப்பு செய்வதற்குமான காலக்கெடு முடிவுக்கு வருகின்றது.

அந்த வகையில், நாளை முதல் தேர்தல் நடைபெறும் 29ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையில் மேற்படி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது சட்டத்துக்குப் புறம்பான செயலாகவே கருதப்படும்.

இதற்கமைய இத்தேர்தல் சட்ட விதிகளை மீறிச்செயற்படும வேட்பாளர்கள் தேர்தலுக்குப் பின்னர் தமக்குக் கிடைக்க கூடிய மாகாண சபை உறுப்புரிமையை இழக்க நேரிடுமெனவும் தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் இறுதிப் பிரசாரக் கூட்டங்கள் இன்று நடாத்தப் படவுள்ளமையினால் அவை தொடர்பிலான தகவல்களை மாத்திரம் நாளை ஊடகங்கள் வாயிலாக வெளிப் படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய அனுமதி வழங்கி யுள்ளார்.


மேலும் இன்று நடைபெற்ற கூட்டங்களின் அறிக்கைகள் தாமதித்துக் கிடைக்கப்பெற்றமை காரணமாக அது குறித்த தகவல்களை நாளை மறுதினம் வெளிவரக்கூடிய செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

இன்று நள்ளிரவு 12 மணியுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவுக்கு வருகின்றபோதிலும் குறித்த வேட்பாளர் நாளை நள்ளிரவு 12 மணிவரையில் மாவட்ட கட்சி அலுவலகத்திலும் தனது உத்தியோகபூர்வ வீட்டிலும் வாக்காளர் மாவட்டத்திலும் பிரசார அலுவலகத்தினை திறந்து வைத்திருக்க முடியும்.

எனினும், நாளை திகதி நள்ளிரவுக்குப் பின்னர் மாவட்ட கட்சி அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ வீட்டில் மாத்திரமே பிரசார அலுவலகம் இருக்க முடியுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# 6 ஆண்டுகளுக்கு ஆட்சியில் நீடிப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம்

## கூறுகின்றார் ஜே.வி.பி. தலைவர்



முன்கூட்டியே தேர்தலை நடாத்தி மேலும் ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சியில் நீடிப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல்கள் முன்கூட்டியே நடாத்தப்பட உள்ளது.

அதன் பின்னர் ஊவா மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடாத்த அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிக் கொள்வதற்காக அரசாங்கம் பல்வேறு சட்ட மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது என்றார்.

# அழுத்தங்களுக்கு அடிபணியாத தலைவர் மகிந்த ராஜபக்ஷ

## .நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா புகழாரம்



(கொழும்பு)

மேற்கத்தைய நாடுகளால் இலங்கை மீது செலுத்தப்படும் அழுத்தங்களுக்கு அடிபணியாத ஒரேயொரு தலைவர் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வா தெரிவித்துள்ளார்.

கொத்தடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானத்தை பெறும் குடும்பங்களின் சிறார்களுக்கு பயிற்சி நூல்களை வழங்கிவைக்கும் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வாவின் எண்ணக்கருவின் அடிப்படையில் கொத்தடுவை மகாவித்தியாலய விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இதன்போது, சுமார் ஆயிரத்து 500 சிறார்களுக்கு பயிற்சி நூல்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன், நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ ஷாந்த பண்டார, அருந்திக பெர்ணான்டோ கனக ஹேரத் மற்றும் ரொஷான ரணசிங்க உள்ளிட்டோர் கலந்து கொணடிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்தசில்வா, மேலும் தெரிவிக்கையில் ஆரம்பகாலத்தில் எதிர்க்கட்சியினர் பயங்கரவாதிகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு நாட்டை பகிர்ந்து வழங்கியிருந்ததாக குற்றம் சுமத்தினார்.

# மாகாண சபைத் தேர்தலை பயன்படுத்தி அழுத்தங்களை முறியடிப்போம்

## நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை



(கொழும்பு)

சர்வதேச சக்திகளின் அழுத்தங்களை முறியடிப்பதற்கு மாகாணசபை தேர்தலை பயன்படுத்திக் கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்பவும், சர்வதேச சக்திகளின் அழுத்தங்களை தோற்கடிக்கவும் மாகாணசபைத் தேர்தலை மக்கள் ஓர் சர்வஜன வாக்கெடுப்பாக கருதி வாக்களிக்க வேண்டும்.

நாட்டை நேசிக்கும் வேட்பாளர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளினால் நாட்டு மக்கள் 30 ஆண்டுகளாக பீதியில வாழ்ந்து வந்தனர்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து சுபீட்சமான இலங்கையை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

புலிப் பயங்கரவாதத்தை மீள கட்டியெழுப்ப காலனித்துவ ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும். ஆளும் கட்சியின் வெற்றியை உறுதி செய்ய அனைவரும் இணைந்து செயற்படுவோம் என தெரிவித்தார்.

# பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு விடுக்கும் ரணில்



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்த வாரம் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பில், பகிரங்க விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்துள்ளார்.

கிரிபத்கொடையில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், இந்த விவாதம் சர்வதேச ரீதியாகவோ அல்லது உள்ளூர் மட்டத்திலான ஊடகங்களில் ஒளிபரப்பப்படலாம் நாளை இலங்கைக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப் புக்கு வருகிறது. எனவே அதற்கு முன்னர் இந்த விவாதம் இடம்பெற வேண்டும்

இந்த விவாதம் நடத்தப்படுவதன் மூலம், இலங்கையின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு தொடர்பாக இணக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

ஜெனிவா பிரேரணை நிறைவேற்றம் காரணமாக இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது இலங்கை மீது பொருளாதார தடையோ விதிக்க வாய்ப்பில்லை.

இந்தநிலையில் மாகாணசபை தேர்தலில் ஏன் மக்கள் ஐக்கிய நாடுகள் பிரேரணைக்கு எதிரான வாக்குகளாக கருதி தமக்கு வாக்குகளை அளிக்குமாறு அரசாங்கம் கோருகிறது என்று புரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்தர்ப்பவாத அரசியலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## கல்முனை முன்னாள் மேயர் குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சந்தர்ப்பவாத அரசியலை செய்து வருவதாக கல்முனை மாநகரசபையின் முன்னாள் மேயர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக சிராஸ் மீரா சாஹிப் இணைந்து கொண்டார். இந் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒருவர் தான் பிறந்த பிரதேசத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பதும் தனது பிரதேசத்தைப் பற்றி சிந்திப்பதும் பிரதேசவாதமாக கருதமுடியாது. சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபையொன்று வேண்டுமென்ற கோரிக்கை இன்று, நேற்று உருவான விடயமல்ல. அது பல வருடங்களுக்கு முன்னராக வலுப்பெற்று வருகின்றது.

சாய்ந்தமருது மக்களின் மிக நீண்டகால தனியான உள்ளூராட்சிமன்றக் கோரிக்கைக் கனவை

கல்முனை மாநகர சபைக்கு நான் முதல்வராக தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து பிரதேசவாதங்களையும் அரசியல் பிரிவினைகளையும் சிலர் விதைக்கத் தொடங்கினர்.

இவ்வாறான நிலையில் நான் மேயராக இருந்த காலப்பகுதியில்பட்ட கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் அளவே கிடையாது.

இவ்வாறான பிரிவினைகளுக்கும் கருத்துக்களுக்கும் மு.கா. தலைமைத்துவமும் பக்கபலமாக செயற்பட்டு குழி பறிக்கும் நடவடிக்கையை காலா காலமாக தமது அரசியல் சுய இலாபங்களுக்காக செய்து வருகின்றது என்றார்.

# பெண்களுக்கு கடமை கட்டுப்பாடுடன் தாய்மையும் முக்கியமான ஒன்றாகும்

## வைத்தியர் ஜெயதேவி கணேசமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது பெண்கள் நாகரிகத்திற்கு ஏற்றவாறு கலாசாரத்தினை புறக்கணிக்கக்கூடாது. பெண்களுக்கு என்றும் தாய்மை முக்கியமானது. பெண்கள் கடமை, கட்டுப்பாடு, இறைபண்புகளை கடைப்பிடிப்பதுடன் தாய்மையினை மிக முக்கியமாக கருத வேண்டும். என யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் தலைவரும் வைத்தியருமான திருமதி.ஜெயதேவி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகம், கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.


அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய போது,

"எமது பெண்கள் நாகரிகத்திற்கு ஏற்றவாறு கலாசாரத்தினை புறக்கணிக்கக்கூடாது. பெண்களுக்கு என்றும் தாய்மை முக்கியமானது. பெண்கள் கடமை, கட்டுப்பாடு, இறைபண்புகளை கடைப்பிடிப்பதுடன் தாய்மையினை மிக முக்கியமாக கருத வேண்டும். அது மட்டுமன்றி கடமை, கண்ணியம், பண்பு ஆகியவற்றை புறக்கணிக்கக் கூடாது. அதேவேளை நவீனமய நாகரிகம் என்ற பெரு வெள்ளத்தில் மூழ்காது நீந்தி கரையைச் சேரத் தெரிந்திருக்க வேண்டும்.

அந்தவகையில் இவ்வாறான ஒன்றுகூடல் நிகழ்வில் பெண்கள் கலந்து கொள்வதினால் எமது கருமங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் வெளிகாட்டப்படுகின்றன.

எனவே முன்னைய காலத்தில் பெண்கள் அடிமைகளாகவும் பொம்மைகளாகவும் இருந்த நிலையினை மாற்றி காலப் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் நாம் பயணிக்கும் திசை சரியாக இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசிஸ் யாழ்.மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர் என்.ஏ.ஜெயராஜன் யாழ். மாவட்ட செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் உதயணி தவரட்ணம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (63)



யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சிப்பட்டறை. (48)

# "விசையுறு பந்தினைப் போல்" விமலனின் நூல்வெளியீடு

வடமராட்சி உதைப்பந்தாட்ட லீக் கழகத்திக் அனுசரணையில் சி.விமலன் எழுதிய "விசை யுறு பந்தினைப் போல்" என்ற விளையாட்டுத்துறைசார் பத்தி எழுத்துக்களைக் கொண்ட நூலின் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் டி.எம்.வேதாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவத்துறை முன்னாள் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எம்.ராஜாரணசிங்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வரவேற்புரையை விரிவுரையாளர் வி.செந்தூரனும், வெளியீட்டுரையை வடமராட்சி உதைபந்தாட்ட லீக் செயலாளர் தி.வரதராஜனும், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க முன்னாள் தலைவர் ப.முருகவேலும் நிகழ்த்தவுள்ளனர்.




ஏற்புரையை நூலாசிரியர் சி.விமலன் நிகழ்த்துவார். மேற்படி நூல் "உயில்" கலை இலக்கிய சங்கத்தின் இரண்டாவது வெளியீடாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (63,90)

## வேலக்கை பிள்ளையார் திருவிழா

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை மஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் கொடியிறக்கமும், 15 ஆம் திகதி பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது.

இந்த திருவிழா நாட்களில் தினமும் அபிஷேகம், வசந்த மண்டப பூசை, ஸ்தம்ப பூஜை ஆகியன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







முல்லைத்தீவு மாவட்டம் - துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 17 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி கடந்த 22ஆம் திகதி மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. வலய மட்டத்தில் சம்பியன் பட்டம் வென்ற ஐயன்கன்குளம் அ.த.க. பாமசாலையின் 17 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் பொறுப்பாசிரியர்களுடன் காட்சி கொடுப்பதைக் காணலாம்.

## ஐ.பி.எல். நிறைவின் பின் இந்தியா, பாகிஸ்தான் மோதல்?

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் நிறைவடைந்த பின்னர் இந்த வருட கோடைக்காலத்தில், பாகிஸ்தானும் இந்தியாவும் கிரிக்கெட் தொடர் ஒன்றை விளையாட முடியும் என தான் நம்புவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேத்தி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். ஆட்டங்களை இந்தியாவுக்குள் மட்டுமல்லாது ஐக்கிய அரபு எமிரேட்டிலும் நடாத்த இந்தியா தீர்மானித்துள்ளது, எமக்கு ஒரு நல்ல விடயமாகப்படுகிறது ஏனென்றால், பாகிஸ்தானுக்கு வந்து விளையாட இந்தியா விருப்பப்படாத பட்சத்தில், இதுபோன்ற வெளியிடங்களில் இந்தியாவை எதிர்த்து பாகிஸ்தானால் விளையாட முடியும் என டாக்காவில் ஊடகவியலாளர்களிடம் பேசிய சேத்தி கூறினார். ருவென்ரி-20 உலகக் கோப்பை போட்டி முடிந்த பின்னர் பாகிஸ்தான் உடனடியாக எந்த கிரிக்கெட் தொடரிலும் விளையாடவில்லை என்றும் எனவே இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியாவுடன் அது ஒரு சின்னத் தொடரில் விளையாட சந்தர்ப்பம் உண்டு என்று அவர் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பாகிஸ்தான் வந்திருந்த இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடாத்தியதன் பின்னர், எந்த ஒரு சர்வதேச டெஸ்ட் அணியும் பாகிஸ்தான் மண்ணில் சுற்றுப்பயணம் செய்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சாதனை படைத்த இலங்கை அணி

உலகக் கிண்ண ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.

ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியொன்றில் அணியொன்றை குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் வீழ்த்திய அணியென்ற சாதனையை இலங்கை அணி நிலைநாட்டியது.

உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின், நேற்று முன்தினம் இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் நெதர்லாந்து அணியை 39 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இலங்கை இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இதற்கு முன்னர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டியில் அயர்லாந்து அணியை 68 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆட்டமிழக்கச் செய்ததே உலக சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலகக் கிண்ண ஒரு நாள் போட்டியிலும் இலங்கை அணி குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழக்கச் செய்த சாதனையை தன் வசம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2003ஆம் ஆண்டு கனடா அணியை 36 ஓட்டங்களுக்குள் இலங்கை அணி ஆட்டமிழக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## கப்டனாக்கப்பட்டார் தவான்

(ஹைதரபாத்)

ஏழாவது ஐ.பி.எல். போட்டியில் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியின் கப்டனாக் தவான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏழாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் ஹைதராபாத் அணியின் கப்டன் தெரிவில் பெரும் இழுபறி நிலை நீடித்தது. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் ஹைதராபாத் அணிக்கு இலங்கை அணியின் சங்கக்கார தலைமை தாங்கினார். இந்நிலையில் இந்தாண்டு ஏலத்தில் சங்கக்கார பங்குகொள்ளவில்லை. இதையடுத்து அணியின் தலைமைப் பொறுப்பு யாருக்கு வழங்குவது என்பதில் ஹைதராபாத் அணி நிர்வாகம் பெரும் குழப்பத்தில் இருந்து வந்தது. இந்நிலையில் அணிக் கப்டனாக தவானை நியமித்துள்ளதுடன் துணைக் கப்டனாக டரன் சமியை நியமித்துள்ளது.

## பெடரர், முர்ரே முன்னேற்றம்



(மியாமி)

மியாமி ஓப்பன் ரென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுக்கு, சுவிஸின் ரோஜர் பெடரர், பிரிட்டனின் ஆன்டி முர்ரே ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில், மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், சுவிஸின் ரோஜர் பெடரர், நெதர்லாந்தின் தெய்மோடீபேக்கரை சந்தித்தார். இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பெடரர், 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில், பிரிட்டனின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் பெலிசியானோ லோபசை 6-4, 6-1 என்ற நேர் செட்களில், வீழ்த்தினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் சீனாவின் லீநா, அமெரிக்காவின் மாடிசன் கீசை 7-6, 6-3 என தோற்கடித்தார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினா, போலந்தின் ரத்வன்ஸ்காவிடம் 5-7, 3-6 என்ற செட்களில் வீழ்ந்தார்.

ஏனைய மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், சுலோவாகியாவின் சிபுல்கோவா, ஸ்பெயினின் கார்லா நவாரோ, உக்ரைனின் எலினா சிவிட்டோலினா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

## நாளைய ஆட்டங்கள்

TM

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

தென்னாபிரிக்கா எதிர் நெதர்லாந்து
இடம்: சிட்டகொங் நேரம் : 3.00 மணி

இலங்கை எதிர் இங்கிலாந்து
இடம் : சிட்டகொங் நேரம் : 7.30

## மெஸ்சி ஹட்ரிக் கோல் வென்றது பார்சிலோனா

(மட்ரிட்)

ரியல் மட்ரிட் அணிக்கு எதிரான லா லிகா தொடரின் லீக் போட்டியில், மெஸ்சி ஹட்ரிக் கோல் அடித்து அசத்த, பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் முன்னணி வீரர்களான மெஸ்சியின் பார்சிலோனா, கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ரியல் மட்ரிட் அணிகள் மோதின. பரபரப்பாக நடந்த இப்போட்டியின் 7ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் இனியஸ்தா, முதல் கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் வீரர் கரீம் பென்சிமா (20, 24ஆவது நிமிடம்) இரட்டை அடி கொடுத்தார். தொடர்ந்து போராடிய பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி (42ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, முதல் பாதியின் முடிவில், இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்து ச்மநிலை வகித்தன.

பின் விறுவிறுப்பாக நடந்த இரண்டாவது பாதியில், முதலில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை ரியல் மட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (55ஆவது நிமிடம்) கோலாக மாற்றினார். இதற்கு அடுத்தடுத்து கிடைத்த பெனால்டி வாய்ப்பில் பார்சிலோனா வீரர் மெஸ்சி (65, 84ஆவது நிமிடங்கள்) துல்லியமாக இரண்டு கோல் அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார்.

கடைசி வரை போராடிய ரியல் மட்ரிட் வீரர்களால் கோல் எதுவும் அடிக்கமுடியவில்லை. இதையடுத்து பார்சிலோனா அணி, 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



# பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 01



தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயம் 01



யாழ். அல் ஹதீஜா பாலர் பாடசாலை 105



பருத்தித்துறை தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலை 01





கைதடி நவீல்ட் பாடசாலை 51



கைதடி கலைவாணி வித்தியாலயம் 51

## நியூவொரியர்ஸ் சம்பியன்

(உடுவில்)

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் நியூவொரியர்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

உடுவில் பிரதேச செயலக பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த வகையில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

14 அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சுன்னாகம் நியூ வொரியர்ஸ் இளைஞர் கழக அணியும், இணுவில் கலைஒளி இளைஞர் கழக அணியும் மோதின.இதில் முதல் செட்டை சுன்னாகம் நியூ வொரியர்ஸ் இளைஞர் கழக அணி 25:12 என புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சிறப்பாக ஆடிய இணுவில் கலைஒளி அணி 25-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தீர்க்கமான இறுதிச் செட்டியில் இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டன. இறுதியில் சுன்னாகம் நியூவொரியர்ஸ் அணி 25-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. நிறைவில் நியூவொரியர்ஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (48)

## கிண்ணம் வென்றது கொக்குவில் ஸ்ரீகாமாட்சி

(யாழ்ப்பாணம்)

நெல்லை பிளாஸ்ரர்சின் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நெல்லை பிளாஸ்ரர்சின் விளையாட்டுக்கழகம் நடாத்திய ஆறு ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியும், திருநெல்வேலி முத்துத்தம்பி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட ஆறு ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தேசிகன் 48, ஜனார்த்தனன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேந்திரன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி முத்துத்தம்பி அணி ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுன் 13, சுரேந்திரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜி,நிசா,அஜன்,ஜனார்த்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். 28 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ஸ்ரீகாமாட்சி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (48)



# அமெரிக்காவில் கதிரொளி ஆற்றலின் பிரம்மாண்டங்கள்

- சாய் ரஞ்சனி -

அமெரிக்காவின் கலிபோர்னியா-நெவாடா ஆகிய மாநிலங்களுக்கு இடையே ஆன நெடுஞ்சாலையில் பயணிப்போர், ஆவலாக நின்று பார்த்து பிரமிக்கும்படி நிற்கிறது ஐவன்பா (Ivanpah) மின்சார உற்பத்தி நிலையம். வெளிர் நீல வானின் நடுவே தகதகவென மின்னிக்கொண்டு, இரண்டாவது சூரியனோ என்று ஆச்சரியத்தில் நம்மை மூழ்கடிக்கும் படி உயர்ந்து நிற்கின்றன மூன்று கோபுரங்கள். கீழே நூறாயிரக்கணக்கான ஹீலியோஸ்டேட்கள் (Heliostats) எனப்படும் சிறு அளவிலான கண்ணாடிகள்.

இவை பகல் வேளையில் சூரியன் இருக்கும் திசையை நோக்கித் திரும்பி, சூரிய கிரணங்களை உள்வாங்கி அதை குறிப்பிட்ட இலக்கிக்கிற்கு அனுப்பும் ஆற்றல் கொண்டவை. இவை கணனிகள் மூலம் கட்டுப்படுத்தி இயக்கப்படுகிறது. தனித் தனியே நாற்பத்தி ஆறு அடுக்குகளைக் கொண்டுள்ள சுமார் 459 அடி உயரமுள்ள இந்த மூன்று கோபுரங்களும், கீழே சுற்றிலும் அமைக்கப் பட்டிருக்கும் பலநூறாயிரக் கணக்கான ஹீலியோஸ்டேட்கள் உள்வாங்கி அனுப்பும் சூரிய வெளிச்சத்தை வெப்ப சக்தியாக மாற்றுகின்றன.

இந்தக் கோபுரங்களின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் கொதிகலன்களில் இருக்கும் தண்ணீர் ஃபரனைற் அளவு கோலில் 1000 டிகிரி வரை செல்லும் இந்த வெப்ப சக்தியினால் சூடேற்றப்பட்டு, நீராவியாக மாற்றப்படுகிறது.


இந்த மூன்று கோபுரங்களின் மேலே இருக்கும் கொதிகலன்களில் நிரப்புவதற்கு நிலத்தடி நீரே பயன்படுத்தப்படுகிறது. இந்த நீராவியினால் சுழற்றப்படும் நீராவி விசையாழிகள் மின்சாரத்தை உருவாக்குகின்றன. இந்த 46 அடுக்குகளிலும் மேலும் பல மின்சார உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு சூடாக்கப்படும் தண்ணீரை மீண்டும் குளிர 3500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இந்த மின்சார உற்பத்தி நிலையம், சரியாக இயங்குமேயானால், இதனால் சுமார் 377 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு கிட்டத்தட்ட கலிபோர்னியாவின் 140,000 வீடுகளுக்கு விநியோகிக்கப் படும். மேலும் சுமார் 2100 பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இவ்வாறாக சூரிய ஒளியைக் கொண்டு மின்சாரத்தை உருவாக்கும் மிகப்பெரிய நிலையமாக ஐவன்பா விளங்கும். இதே போன்று பெரிய அளவில் போன்ற பெரிய அமைப்புகளை உருவாக்குவதும் சாத்தியமாகிறது.

ஐவன்பா போன்ற அமைப்புகளுக்கு இன்றிருக்கும் நிலையை அடைவது அவ்வளவு எளிதாக இல்லை. மொஹாவே போன்ற வறண்ட பகுதிகளில் வாழும் உயிரினங்களுக்கும் பறவைகளுக்கும் இந்த கட்டடங்களில் இருந்தும், ஹீலியோஸ்டேட்களில் இருந்தும் உருவாகும் வெப்பக் காற்று ஒரு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே விளங்குகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினர் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளது.

ஆனால் இது போன்ற இயற்கை வளங்களைக் கொண்டு மின்சார உற்பத்தி செய்வதை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினர் ஆதரிக்காமலும் இல்லை. ஏனெனில் இந்த வகைத் தொழில் நுட்பத்தினால் காபனீரொட்சைட் போன்ற நச்சுப் பொருள்கள் காற்றில் கலப்பது பல மடங்கு தவிர்க்கப்பட்டு, இங்குள்ள தாவர வகைகள் பாதிக்கப்படாமல் உயிர்வாழ ஏதுவாகிறது. மேலும் நீராவியைக் குளிர வைக்க காற்றைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இம்மாதிரி வறண்ட நிலப்பரப்புகளில் தண்ணீரும் அதிகம் செலவு செய்யப்படுவதில்லை. மேலும் சூரிய வெளிச்சத்தை உள்வாங்கி அனுப்பும் இந்த ஹீலியோஸ்டேட்கள் நாள் முழுவதும் சூரிய ஒளியைப் பெருமளவு உள்வாங்கி அதை இந்தக் கோபுரங்களில் படும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடிகளின் மேல் மாசு படியுமேயானால் இதன் பயன்பாடு பாதிக்கப்படும். எனவே அவ்வப்போது இக்கண்ணாடிகளைத் துடைத்து சுத்தம் செய்வதற்கு ரோபோ இயந்திரங்கள் உள்ளன.

அக்டோபர் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது சோதனைக் கட்ட நிலையில் இருக்கும் விளங்கும் மற்ற சில மின் உற்பத்தி நிலையங்களில் அபுதாபியில் உள்ள ஷாம்ஸ்1, ஸ்பெய்னில் உள்ள ஆண்டசோல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.




அமெரிக்காவில் இதே போன்று 232 மின் உற்பத்தி நிலையங்கள் பலதரப்பட்ட கட்டங்களில் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

ஐவன்பா போன்ற அமைப்புகளில் உபயோகிக்கப்படும் Photo voltaic cells என்பவை நாம் சாதாரணமாக சிறிய அளவில் வீட்டுக்கூரைகளின் மேல் பயன்படுத்தும் வகையைச் சார்ந்தவை. மிக எளிதில் கிடைக்கக் கூடிய இவை, விலை மலிவாகவும் கிடைப்பதனால் இதைப் இதனை எதிர்க்கின்றனர்.

இதைத் தவிர்க்க ஐவன்பாவும் பல முயற்சிகளை எடுத்தது. உதாரணத்திற்கு இங்கிருக்கும் ஒரு வகை ஆமைகள் மற்றும் சில வகை உயிரினங்களை இடம்பெயர்த்து பாதுகாப்பான சூழ்நிலைகளில் வளர்க்க உத்திகள் செய்யப்பட்டன. இதற்காகவே இந்த நிறுவனம் 7000 ஏக்கர் நிலப்பரப்பை சுமார் 11.4 மில்லியன் டொலர் செலவு செய்து உருவாக்கி வைப்பதற்கு தண்ணீரை தவிர்த்து காற்றையே உபயோகப்படுத்துவதால் தண்ணீர் விரயமாவதும் தவிர்க்கப்படுகிறது.

இந்த வகைத் தொழில் நுட்பத்தில் மேலும் என்ன முன்னேற்றங்கள் உருவாகின்றன என்றும், அதனால் ஏற்படும் சாதக பாதகங்கள் என்னவென்பதையும் நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# பாவம் முதலமைச்சர்!

- ந.பரமேஸ்வரன் -



வடமாகாண முதலமைச்சரை எதிர்வரும் நான்காம் திகதி ஆஜராகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வலி கிழக்கு பிரதேச சபைத்தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் செய்த முறைப்பாட்டின் பிரகாரமே மேன் முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வடமாகாண முதலமைச்சர் 1994ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்து, பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றவர். 2004ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற் பின் பிரசங்கம் செய்து கொண்டு சிவனே என்று இருந்த மனிசனை வில்லங்கப்படுத்தி அரசியலுக்குள் கொண்டு வந்தவர்கள் தமிழ்த் தேசியவாதிகள்.

இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒருவராலேயே முதலமைச்சர் கூண்டிலேற்றப்பட்டுள்ளார். தனக்கு இப்படியொரு சோதனை வரும் என்று முதலமைச்சர் கனவு கூட கண்டிருக்க மாட்டார்.

தற்போது மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாக கடமையாற்றும் நீதிபதிகள் நிச்சயமாக முதலமைச்சரின் கீழ் கடமையற்றியவர்களாகவே இருப்பார்கள். தனக்கு கீழே பணி புரிந்த ஒருவருக்கு முன்னால் கை கட்டிக்கொண்டு நிற்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை தனக்கு ஏற்படும் என முதலமைச்சர் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்.


இந்தப் பிரச்சினையை முதலமைச்சர் எவ்வாறு கையாளப்போகிறார்? நானும் ஒரு காலத்தில் இதே கதிரையில் இருந்தவன் தான் என்று சொல்லிக்கொண்டு இறுமாப்புடன் கை கட்டியவாறு நிற்கப்போகிறாரா? அல்லது தமிழ்ச் சினிமாக்களில் வருவது போல் மந்திரத்தால் கதிரை ஒன்றை வரவழைத்து அதில் உட்காரப்போகிறாரா? அல்லது இராவணனுடைய அரசவையில் அனுமான் இராவணனுடைய சிம்மாசனத்திற்கு சமனாக தனது வாலை சுருட்டிக்கொண்டு அமர்ந்தது போல் அமர்வதற்கு முதலமைச்சருக்கு வாலும் இல்லை.

அல்லது தலையைக்குனிந்து கொண்டு கனம் கோட்டார் அவர்களே என்று அழைக்கப்போகிறாரா? எது எப்படியிருந்தாலும் ஒரு சுப்பிறீம் கோட் நீதவானை கூண்டிலேற்றிய பெருமை கூட்டமைப்பினரையே சாரும். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று முதலமைச்சர் துண்டை உதறிக்கொண்டு ஓடினாலும் அந்தப்பெருமையும் கூட்டமைப்பினரையே சாரும்.

விக்கி முதலமைச்சராகப் பதவி வகிப்பதையே அரசாங்கமும், சர்வதேசமும், தமிழ் மக்களும் விரும்புகின்றனர். முதலமைச்சர் துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று ஓட்டம் பிடித்தால் அதற்குக் காரணம் கூட்டமைப்பே.

# வலியை மறைக்க புது மருந்து!

பல்வேறு காரணங்களால் உடம்பில் வலி ஏற்படுகிறது. வலி எதனால் ஏற்பட்டாலும், உடனே வலியை உணராமல் இருக்க மருத்துவர்கள் வலியை மரத்துப் போகச் செய்யும் மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். வலியை மரத்துப் போகச் செய்ய இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட எல்லா மருந்துகளையும் விடவும் மிகச் சிறந்த மருந்து ஒன்றை அவுஸ்ரேலியாவில் உள்ள குயின்ஸ்லாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த மருந்தை எலிகளுக்குக் கொடுத்துப் பார்த்திருக்கிறார்கள். நல்ல முடிவு கிடைத்திருக்கிறது!



இப்போது அறுவைச் சிகிச்சைக்கு முன்பு, வலியை மரத்துப் போகச் செய்யும் மருந்துகளை முதுகில் உள்ள தண்டுவடத்தில் ஊசி மூலம் செலுத்தும் முறை உள்ளது. இதனால் அறுவைச் சிகிச்சை செய்யும்போது வலி தெரியாது. ஆனால் அதற்குப் பிறகு ஊசி போட்ட இடத்தில் குறைந்தது 3 - 4 ஆண்டுகளாவது கடுமையான வலி சிலருக்கு இருக்கும். இந்தப் பிரச்சினை இந்தப் புதிய மருந்தால் இப்போதில்லை.

இந்த மருந்தை வாய் மூலமாகவும் உட்கொள்ளலாமாம்.

இந்தப் புதிய மருந்து... நத்தையின் வாயிலிருந்து வெளிப்படும் நச்சுத் தன்மையுள்ள திரவத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. இந்தத் திரவத்தில் உள்ள நூற்றுக்கணக்கான சிறிய புரதங்களில் (Proteins) வலியை மரத்துப் போகச் செய்யும் தன்மை இருக்கிறதாம்.

# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை


2

சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்.
[நன்றி: Jaffna Diabetic Centre]

“கண்டதும் கற்றவன் பண்டிதன் ஆவான் கண்டதும் உண்டவன் பண்டிபோல் குண்டாவான்” என்று பலரும் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று முன்னோர்கள் கூறிவைத்திருக்கிறார்கள். எனவே நாம் எம் முன்னவர்களின் கருத்துக் களையும் கருத்தில் எடுத்து, ஆரோக்கியமாக சுவையாக நிறைவாக உண்டு எமது நிறையை சரியான அளவில் பராமரிக்கும் கலையை கற்றுக்கொள்ள முயலுவோம்.

நிறையை குறைத்துக் கொள்வதற்கு பட்டினி கிடக்கவேண்டிய அவசியமில்லை. பட்டினி கிடந்து நிறையை குறைத்துக்கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லதல்ல. நிறை குறைப்பதற்கு முயற்சி எடுக்கும் காலத்திலே ஆரோக்கியமான உணவுவகைகளை உண்ணுவதை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. சரியான நடவடிக்கைகள் மூலம் உடல் நிறையை குறைத்தால், வரும் காலங்களில் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்று பயப்படவேண்டிய அவசியமும் இல்லை.

உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு பல்வேறு தரப்பினரிடையேயும் குறிப்பாக இளம் வயதினரிடையே மேலோங்கிவருவது ஒரு நல்ல அறிகுறியாகும். உடல் நிறையை குறைத்துக்கொண்ட பலர் களைப்பு நீங்கி மூட்டு நோ, நாரி நோ என்பன குறைத்து பல்வேறுபட்ட நோயின் தாக்கங்கள் குறைந்து பாவிக்கும் மருந்துகளையும் குறைத்துக் கொண்டு




ஆரோக்கியமாக வாழ்வது மேலும் பலரை நிறைகுறைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு தூண்டுகோலாக இருக்கிறது.

ஒருவர் அளவான உடல்நிறையை பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செயவதுடன் அவரின் செயற்திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதிகரித்த உடல்நிறை பல்வேறு நோய்களுக்கு இட்டுச் செல்லும் என்ற விடயத்தை பொதுவாக அனைவரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். உடல் நிறையை சரியாக அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.

ஒருவருக்கு நிறையை குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது சம்பந்தமான தெளிவும் ஏற்படுமாயின் நிறையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது மிகவும் இலகுவானது. இனி வரும் பகுதிகளில் இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது சம்பந்தமாக பார்ப்போம்.

(தொடரும்)

# சினிமா சினிமா

◗ 8-ஆம் நூற்றாண்டு கூத்துக் கலைஞன்... மனோ ரஞ்சன் என்ற 21 ஆம் நூற்றாண்டின் சூப்பர் ஸ்டார் என “உத்தம வில்லன்” படத்தில் இரட்டை வேடங்கள் ஏற்றுள்ளார்




கமல்ஹாசன். கூத்துக் கலைஞனுக்கு ஜோடியாக ஊர்வசி, சூப்பர் ஸ்டாரின் ஜோடியாக ஆண்ட்ரியா நடிக்கின்றனர். மற்றும் நாசர், ஜெயராம், பார்வதிமேனன், பூஜா குமார் ஆகியோரோடு இயக்குநர் கே.பாலசந்தரும் நடிக்கிறார். திரைக்கதை மற்றும் கதை அத்துடன் கிரேஸி மோகனுடன் இணைந்து வசனமும் கமல் எழுதுகிறார். நடிகர் ரமேஷ் அரவிந்த் படத்தை இயக்குகிறார். தீபாவளிக்கு படம் வெளியாகிறது.

◗ மணிவண்ணன், ஆர். சுந்தர்ராஜன், பாண்டியராஜன், பாக்யராஜ், பாத்திபன், சேரன், சுந்தர் சி ஆகியோர் இயக்குநராக வெளிப்பட்டதுடன், நடிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினர். அமீர் “யோகி” படத்திலும் மிஷ்கின் நந்தலாலா, ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படங்களிலும் நடித்தனர்.. இந்த வரிசையில் “தவமின்றி கிடைத்த வரமே” படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிக்க இருக்கிறார் இயக்குநர் பிரபுசாலமன். கதாபாத்திரத்தின் அழுத்தம் பிடித்திருந்ததால் அப்படத்தில் நடிக்க உள்ளதாகத் தெரிவித்திருக்கும் பிரபுசாலமன், புதுமுகங்கள் நடிப்பில் “கயல்” என்ற படத்தை இயக்கியும் வருகிறார்.









◗ ஏ.ஆர்.முருகதாஸ் விஜய், சமந்தா நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். அடுத்து அஜித் படத்தை இயக்கவிருக்கிறார். ஏற்கெனவே அஜித் நடித்த “தீனா” படத்தை இயக்கியவர். “வயதுக்கு ஏற்ற தோற்றத்துக்கு முன்னுரிமை இருக்கட்டும்” என்ற அஜித்தின் நிபந்தனையை ஏற்று இந்த திரைக்கதையை அமைத்திருக்கிறாராம் ஏ.ஆர். முருகதாஸ்.

◗ ஆளுங்கட்சியின் அதிருப்திக்கு ஆளாகி இருக்கும் தளபதி நடிகர், இனி, அரசியல் பிரவேசமும் இல்லை; அரசியல் படங்களிலும் நடிக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டாராம். விளைவு, எதிர்காலத்தில், எப்படியும், நடிகர் அரசியலுக்கு வருவார் என்று, அவரது நற்பணி மன்றத்தில் அங்கம் வகித்திருந்த பெருவாரியான இரசிகர்கள், பிரபல கட்சிகளுக்கு தாவி வருகின்றனர். இதனால், சத்தமில்லாமல், தளபதியின் கூடாரம் காலியாகிக் கொண்டிருக்கிறது.

◗ “தொடர்ந்து மரத்தை சுற்றி டூயட் பாடிக் கொண்டேயிருப்பது போரடித்து விட்டது அதனால் தான், அனுஷ்கா நடித்து வரும் பாகுபாலி படத்தில், ஒரு மாறுபட்ட சரித்திர கால பெண் வேடத்தில் நடிக்கிறேன்” என்று கூறும் தமன்னா, அதிரடியான, வில்லி வேடம் என்றாலும்... தேவைப்பட்டால், சொர்ணாக்கா ரேஞ்சுக்கும், ஆவேசமான வில்லியாக நடிக்கத் தயாராக உள்ளதாக கூறுகிறார். “ஹீரோயினாக பல வித கதாபாத்திரங்களில் நடித்து விட்டேன். வாழ்நாளில் ஒரு படத்திலாவது வில்லியாக நடிக்க வேண்டும். அந்த வாய்ப்புக்காக காத்திருக்கிறேன்” என்று ட்விட்டரில் எழுதியிருக்கிறார் தமன்னா. ஆனால், இயக்குனர்கள் தான், “பஞ்சுமிட்டாய் தமன்னாவை எப்படி பயங்கரமாக காட்ட முடியும்...” என்று திகைக்கின்றனர்.

◗ அங்காடித் தெரு மற்றும் அரவான் படங்களை தொடர்ந்து, வசந்தபாலன் இயக்கியுள்ள படம், காவியத்தலைவன். 1930களில் நாடகத் துறையை மையப்படுத்தி, இப்படம் தயாராகியுள்ளது. சித்தார்த், பிருத்விராஜ் நடித்திருக்கும் இப்படத்தில், சந்தானத்திற்கும் முக்கிய வேடம். மூன்று பேருமே படத்தில் பெண் வேடமேற்றும் நடித்துள்ளனராம்.

◗ “சாமுராய்”, “கல்லூரி”, “காதல்”, “வழக்கு எண் 18/9” உள்ளிட்ட படங்களின் மூலம் கவனத்தை ஈர்த்த பாலாஜி சக்திவேலின் அடுத்த படைப்பு “ரா... ரா... ரா... ராஜசேகர்”. இந்தப் படத்தையும் லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனமே தயாரிக்கிறது. விஜய் மில்டன் ஒளிப்பதிவு. லிங்குசாமியின் அண்ணன் மகன் மதி ஹீரோ.

◗ விஜய்யின், தலைவா படத்தில், இரண்டாவது நாயகியாக நடித்த பொலிவுட் நடிகை ராகினி நந்துவானி, மோகன்லாலுடன் ஒரு மலையாள படத்தில் நடிக்கிறார்.

◗ பி.சி.ஸ்ரீராம், சந்தோஷ் சிவனுடன் இணைந்து பணியாற்றி வந்த மணிரத்னம், தன் புதிய படத்தில், ஒளிப்பதிவாளர் ரவிவர்மனுடன் இணைகிறார்.

◗ “அபூர்வ நாயகன்” என்ற பெயரில், கமல்ஹாசனை பற்றிய புத்தகம் ஒன்றை, அவரது இரசிகர்கள் வெளியிட்டுள்ளனர்.

◗ ஷகீலா தன் சுயசரிதை நூலை எழுதிவிட்டார். திரைப்படமாக எடுக்க முயற்சிகள் நடந்துவருகிறது. நாயகியாக நடிக்க மறுத்து, கோலிவுட் நடிகைகள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கின்றனராம்.

# கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

## பனை அபிவிருத்தி சபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பனம்பொருள் கைப்பணி உற்பத்தியாளர்கள் 432 பேருக்கு ரூபா 4,32,000 பெறுமதியான உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதியில் வழங்கப்படும் இந்த உபகரணங்கள் முதற்கட்டமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பனம்பொருள் மற்றும் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தியாளர் ஒருவருக்கு 10,000 ரூபா பெறுமதியில் இந்த உபகரணங்கள் 432 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் எதிர்வரும் 01 ஆம்திகதி முதல் 06 ஆம்திகதி வரை 'பனை கித்துள் வாரம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதற்கமைய இந்த வாரகாலத்தில் வடகிழக்குப் பகுதிகளில் 50 ஆயிரம் பனங்கன்றுகளை நடுகை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (63)




சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முதலாம் வட்டாரத்துக்குட்பட்ட பருத்தித்துறை முதலாம் ஒழுங்கை வீதி நகராட்சி மன்றத்தினால் புனரமைக்கப்படவுள்ளது. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கை அண்மையில் நகராட்சி மன்றத் தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. (11)

# உலக நாடக தின நிகழ்வு

மல்லாகம் கோயில் வீதியில் அமைந்துள்ள புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக நாடக தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் எஸ்.ரி குமரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் உலக நாடகத்தினை சிறப்பிக்கும் வகையில் நவீன நாடகங்களின் இன்றைய சமகால போக்கும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் கருத்தாடல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. அன்றையதினம் புத்தாக்க அரங்க இயக்கலைஞர்களான எஸ்.ரி.குமரன், எஸ்.ரி அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் பண்பாடு நாடக ஆற்றுகையும் இடம் பெறவுள்ளது.(63)

# பரமர் சங்கமம்



'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' 'தினை விதைத்தவன் தினை அறுப்பான' எண்டு அனுபவம் இல்லாமலே அந்த நாளேலை சொல்லி வைச்சவை? இலங்கை அரசுக்கு மார்ச் மாதம் எமகண்டமாகத்தான் போச்சு.

எந்த இடத்திலை வேலைத்திட்டங்களுக்காகத் தோண்டினாலும் எலும்புக் கூடுதான் வெளிவருது. முல்லைத்தீவு, மூங்கிலாற்றுப் பகுதியில் வயலை ரைக்றரால் உழுதபோதும் மனித எலும்புக் கூடுகள், திருகோணமலை நகர வைத்தியசாலைப் பிரதேசத்தில் சிறிய கட்டடம் அமைக்க அத்திவாரம் வெட்டினால் எலும்புக்கூடு.

தென்பகுதியிலும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமொன்றிலும் எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டன. இத்தனைக்கும் மேலாக மன்னார் மாந்தப் பிரதேசத்தில் நீர் வழங்கல் குழாய் தாக்க வெட்டிய வேளையில் வெளிப்பட்ட புதைகுழி பகுதி பகுதியாக 32 கடவைக்கு மேலாகத் தோண்டி 82 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டிருப்பது உலகப் பிரசித்தம்.

இலங்கைத் தீவை இரத்தின துவீபமெனப் பழம்பெரும் இலக்கியங்கள் புகழ்ந்துரைத்துள்ளன. இப்போதும் இரத்தினபுரி மாவட்டங்களில் இரத்தினக்கற்கள் தோண்டி எடுக்கும் வாணிபம் நடைபெற்று வருகிறது. அதை விடப் புதையல்கள் தோண்டி எடுத்த மண் இந்த மண்.

இக்காலத்தில் வடபகுதிகளில் எங்கை மண்ணைத் தோண்டினாலும் மண்டை ஓடுகளும், மனித எச்சங்களுந்தான் மேலெழுகின்றன. செம்மணிப் பிரதேசம் இன்னமும் முழுமையாக அகழ்ந்து பார்க்கப்படவில்லை. சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருக்கையில் கோப்ரல் ராஜபக்ஷ தெரிவித்த தகவலுக்காக தோண்டப்பட்டது வெறும் கண்துடைப்பாகவே முடிந்தது.

தவிர்க்க முடியாமல் தொடர்ந்தும் தோண்டப்பட்டு வந்த மன்னார் மாந்தைப் பிரதேச மனிதப்புதை குழியைத் தோண்டும் பணிக்கும் ஆப்பு வைக்கப்பட்டாச்சு. அதற்குச் சொல்லப்பட்டது. 1936 ஆம் வருடம் மன்னார் பிரதேசத்தில் மலேரியா நோயால் சாவடைந்தவர்களை புதைக்கப்பட்ட இடமொன்று.

30 வருடங்களாக வட பகுதியில் தலை தூக்கி இருந்த பயங்கர வாதத்தை கத்தி இன்றி இரத்தமின்றியா முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது? ஆனால் ஜனாதிபதி வாய் திறந்தால் சொல்வது யுத்த மீறல்கள் எதுவும் நடக்கவில்லை; எண்டுதான். அப்புடியெண்டால் இம்மனிதப் புதைகுழிகளும், காணாமற் போனவர்களும் எப்புடித் தோன்றினர்?

அதேவேளை சர்வதேச நாடுகளும் ஜெனிவாவில் கூடிக் கற்பனைக் கதைகளையா உருவாக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? ஒரு பூசணிக்காயை மறைக்க பல மூடை அரிசிச் சோறு வேண்டும். ஒரு கோப்பை சோற்றில் மறைக்க எடுக்கும் முயற்சி தானை இலங்கை அரசு செய்யுது.

மன்னார், திருக்கேதீஸ்வரம் ஆலயம் பல நூற்றாண்டு பழமை வாய்ந்தது. அவ்வாலயத்துக்கு சமீபமாய் இடுகாடு அமையும் சாத்தியம் சாதாரண நிலைமையில் உருவாகி இருக்க முடியாத ஒன்று. குடிசனங்கள் விரட்டப்பட்ட வெறிச்சோடிய யுத்த காலத்திலேயே மேற்படி புதைகுழி தோன்ற வாய்ப்பிருந்த தென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதொன்றாகும்.

புதைக்குழியை தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்மென வலியுறுத்தும் குரல்கள் வலுக்கத் தொடங்கி விட்டன. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் எண்டும் எவ்வறுப்பானைத்திட்டுறே சொல்லுங்கன் பாப்பம்....

# நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி

(வரணி)

தென்மராட்சிப்பகுதி வர்த்தகர்கள், மரக்கறிவியாபாரிகள், கடலுணவு வியாபாரிகள் கடந்த 17 - 18 ஆம் திகதி தமது நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் தமக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் முகமாக தாம் இம் முத்திரையிடும் பணியில் ஈடுபட்டு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவிக்கின்றனர்.

நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடாவிடின் அவர்களின் நிறுவை அளவைகள் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்வது சகல வர்த்தகர்களும் அறிந்த விடயமாகும் (150)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(வரணி)

வடவரணி 'சைவப் பிரகாச வித்தியாசாலை வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகவும், மழைகாலத்தில் சேறும் சகதியுமாகவும் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் பாடசாலை, பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், கிராம அலுவலர் அலுவலகம், முன்பள்ளி ஆகியன காணப்படுவதால் அங்கு தமது தேவைகளை நிறை வேற்றச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்

மாசேரி குடத்தனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியை அதிகம் பயன்படுத்துவதால் இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு உரிய தரப்பினரிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (150)

# முரசின் இன்றைய பலன்



(26.03.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 26 ஆம் திகதி.
தசமி / அமிர்த சித்தம் . உத்தர நட்சத்திரம்.
மு.ப. 08.54 வரை. பின் திருவோணம்.
இராகுகாலம 12.15 - 01.45 வரை. சுபநேரம 04.45 - 06.15 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | ஒப்பிட்டுப் பேசியதால் குடும்பத்தின் மகிழ்ச்சி பாதிப்படைதல், நீண்டகால நிலுவை வந்து சேர்வதினால் நிம்மதியும், சந்தோஷமும் ஏற்படல். |
| ரிஷபம்  | இரத்த உறவினர் வருவதினால் மகிழ்ச்சி நிலை ஏற்பட்டு குதூகலம், பிரமுகரின் தொடர்பால் அரசுத் தொழிலுக்கு கட்டியங் கூறுதல். |
| மிதுனம்  | தட்டிக்கு கொடுத்ததால் ஆர்வம் மேலிடல், திட்டமிடாது ஈடுபட்ட காரியத்திலும் வெற்றி கிடைத்தல். |
| கடகம்  | கோபம் கொந்தளிப்பு ஏற்பட்டவேளை பொறுமையினால் துயரை விலக்குதல், சொத்துப் பிரச்சினை தலை தூக்கியதால் பதகளிப்பு. |
| சிம்மம்  | தந்தையின் உடல் நலத்தில் கூடிய கவனம் எடுப்பதில் பின்னிற்க வேண்டாம், கடனின் ஒரு பகுதியை செலுத்தியதால் நிம்மதி ஏற்படல். |
| கன்னி  | மக்களின் உதவியால் புதியன கிட்டும் சந்தர்ப்பம் ஏற்படல், ஒற்றுமை பலப்பட ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்தல். |
| துலாம்  | ஜென்மச் சனியினால் ஆரோக்கியத்தில் தொல்லை ஏற்படல், புதிய ஒப்பந்தம் பற்றித்தடுமாறும் நிலையில் இருப்பீர்கள். |
| விருச்சிகம்  | கட்டாயப்படுத்தி இம்சித்திதால் ரகளை ஏற்படல், உடன் பிறப்புக்களின் உதவியால் பணவரவு தக்க வைத்தல். |
| தனுசு  | தன்னம்பிக்கையைக் கைவிடாததால் இறுதியில் வெற்றி வாகை சூடல், புதிய ஒப்பந்தம் தேடி வரும்போது நழுவவிடாதீர்கள். |
| மகரம்  | ஓய்வு கொடுத்ததால் புத்துயிர்ப்புப் பெற்று காரிய ஜெயமாதல், பிரச்சினையைத் தீர்க்க புரிய யோசனையைப் பயன்படுத்தல். |
| கும்பம்  | செவிமடுத்தலால் பிரச்சினை விலகிச்செல்லல், சுபகாரியத்திற்கு பணச்செலவு ஏற்படல். |
| மீனம்  | மன உளைச்சல் ஏற்படும் என்பதை எடுத்துரைத்ததால் ஆர்வம் பிறத்தல், உடல் நலக்கேடு ஏற்பட்டுப் பின்னா சீராதர். |

# செலான் வங்கி கிளையினால் நெல்லியடியில் சிறுவர் சந்தை

(வடமராட்சி)

செலான் வங்கி ஒவ்வொரு பிரதேசத்திலும் தமது கிளையினூடாக சிறுவர் சேமிப்பை ஊக்கு விக்கும் முகமாக சிறுவர் விற் பனைச் சந்தையை நடாத்தி வருகின்றது.

இதன்படி நெல்லியடிக் கிளையினரால் நெல்லியடி பகுதியிலுள்ள சிறார்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக பணத்தை சேமிக்கும் பழக்கத்தை ஊக்கு விப்பதற்கும், வீட்டிலே கல்வி கற்பதுடன் பொழுது போக்குக்காக வீட்டுத்தோட்டம் செய்வதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வங்கியினால் சிறுவர் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்று புதன்கிழமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், நாளை வியாழக்கிழமை மாணிக்க வாசகர் வித்தியாலயத்திலும் எதிர்வரும் 2 ஆம் திகதி தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் முற்பகல் 10 மணிமுதல் 12 மணி வரை விற்பனைச் சந்தை இடம் பெறவுள்ளது.

இவ்விற்பனைச் சந்தையில் சிறுவர்கள் தங்களுடைய வீட்டில் பயிரிடப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட காய்கறி, பழவகைகள், வீட்டில் தயாரித்த சிற்றுண்டிவகைகள் மற்றும் கைவினைப்பொருட்கள் ஏதுவாக இருந்தாலும் சிறுவர் சந்தையில் விற்பனை செய்ய முடியும்.

மேலும் சிறுவர்களால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து பெறப் படும் பணம் அவர்களின் பெயரில் செலான் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

இச் சந்தையில் தரம் 1,2 மாணவர்கள் மட்டும் பங்குபெறுவதுடன் விற்பனையில் ஈடுபடும் சிறுவர்கள் பொருட்கள் விற் பனை செய்பவர்கள் போன்று தாங்கள் விரும்பிய உடையணிந்து வரமுடியும். இச்சந்தையில் வியாபாரி போன்று மிகவும் பொருத்தமான உடை அணிந்து காட்சியளிக்கும் சிறுவருக்கு பரிசில் வழங்கப்படும் என வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.(18)

## தந்தையுடன் வந்த சிறுமியை காணவில்லை; வைத்தியசாலையில் பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தந்தையுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்றிருந்த சிறுமி ஒருவர் அங்கிருந்து சிறிது நேரம் காணாமற் போனதால் யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் காலை பரபரப்பு நிலவியது.

யாழ்.போதனாவைத்திய சாலைக்கு தனது 16 வயது மகளுடன் வந்து வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவிற்குச் சென்று அங்கு வைத்தியரிடம் சிகிச்சை பெற்று மருந்து எடுப்பதற்காக தனது மகளை மருந்து எடுக்கும் பகுதியில் உள்ள இருக்கையில் இருக்குமாறு கூறிவிட்டு தந்தை மருந்து எடுக்கச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அங்கிருந்த ஒருவர் சிட்டை எடுக்கச் செல்ல வேண்டும் என்று கூறி சிறுமியை அழைத்துச் சென்றிருக்கின்றார். பின்னர் சிறுமியின் தந்தை மகள் இருந்த இடத்திற்கு வந்து பார்த்த போது மகளைக் காணவில்லை எனக் கூறியமையால அங்கு பரபரப்பு நிலவியது.

இது இவ்வாறு இருக்க குறித்த சிறுமி அங்கு மீளவும் வரவே பரபரப்பு நீங்கியது இதன் பின்னர் சிறுமி மன வளர்ச்சி குறைந்தவர் எனவும் இதனைப் பயன்படுத்தி குறித்த நபர் சிறுமியைக் கூட்டிச்செல்ல எத்தனித்திருக்கலாம் எனவும் அது கைகூடாததினால் விட்டுச் சென்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி


(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்களால் தயாரித்து வழங்கப்படும் "வேள்வித் திருமகன்" என்னும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் சித்திரை மாதம் 10 ஆம், 11 ஆம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் அரங்கேற்றப்படவுள்ளது.

இக்காட்சி திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு 10 ஆம், 12ஆம், 13 ஆம் திகதிகளிலும் மாலை 7.30 மணிக்கு 11 ஆம்திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளது என மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் கலந்துகொள்ள விரும்பும் பார்வையாளர்கள் யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (63)

## ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் தலைமைத்துவக் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)


ஆனைக்கோட்டை இளைஞர் கழகம் ஏற்பாடு செய்து நடாத்திய தலைமைத்துவக் கருத்தரங்கு ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை, மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்கள் கலந்து பயன் பெற்றனர்.

இந் நிகழ்வில் வளவாளர்களாக யாழ். இந்துக் கல்லூரி வழிகாட்டல் ஆலோசனை சேவை பிரிவின் பொறுப்பாசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய ஆசிரியர் எஸ்.இக்னேசியஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வின் விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னல்ட், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார், ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை அதிபர் திருமதி ந.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## மின்கட்டணத்தை செலுத்தாதோருக்கு நோட்டீஸ்




(வரணி)

வரணிப்பிரதேசத்தில் நீண்ட நாட்களாகியும் மின்கட்டணம் செலுத்தாதவர்களுக்கு இம் மாதம் சிவப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலுக்குப் பின் பணம் செலுத்தத் தவறின் மின் இணைப்பு எப்போதும் துண்டிக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் பலர் முண்டியடித்துக் கொண்டு மின் கட்டணத்தை செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே மின்சிட்டையில் முப்பது நாட்களில் கட்டணம் செலுத்தாவிட்டால் மின்சாரம் துண்டிக்கப்படலாம் என மின்சார சபையினால் அறிவித்திருப்பது மின்பாவனையாளர்கள் அறிந்த விடயமாகும். (150)

## ஆயுர்வேதம்

### வாயுவின் சீற்றமும் மனதில் பயமும்



வாயு தோஷத்தின் வறட்சியினால் வயோதிகத்தில் உடலின் நெய்ப்பு எனும் சத்தான பகுதி வறண்டு விடுகிறது. பயிர் செய்ய வேண்டிய நிலம், வறண்ட நிலையில் பல இடங்களில் வெடித்து நிற்பதை வரப்பின் மீது நின்று கொண்டு நீங்கள் பார்த்திருக்கக் கூடும். அதுபோல சத்தான நீர்ப்பகுதியை வயோதிக உடல் இழந்து விடுகிறது.

வயோதிகத்தில் பித்த-கபதோஷங்களால் சூழப்படாத வெறும் வாயுதோஷத்தின் தனியான சீற்றத்தின் பலனாக மூட்டு வலி, கழுத்து வலி, கை,கால் வலி உண்டாகும். உடலுக்கு நெய்ப் பைத் தரும் மூலிகை நெய் மருந்துகளில் ஒன்றை, சிறிய அளவில் காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட, குடலில் இந்த நெய்ப்பின் வரவால், உலர்ந்த தாதுக்களை விரைவில் வளர்ச்சியடையச் செய்யும். உடல் பலம், பசித் தீ, பிராண சக்தி ஆகியவற்றையும் அதிகரிக்கச் செய்யும்.

அதன் பிறகு மூலிகை நீராவியால் உடலைக் குளிப்பாட்ட, உடல் மென்மையான தன்மையை அடையும். உடலின் மென்மையால் வாதநோய்கள் நிலைபெறாது. இப்படி நெய்ப்பும், நீராவி சிகிச்சையும் தொடர்ந்து செய்தால் சில நாட்களிலேயே உடலில் ஏற்படும் குத்து வலி, மூட்டு வலி, தசைப் பிடிப்பு முதலியவை நீங்கி விடும்.

வாயுவின் சீற்றத்திற்கும் மன பயத்திற்கும் சம்பந்தமுண்டு. வாயுவின் அதிகமான சலன விஷேசத்தால் மனம் மருண்டு போகும். கல்யாணகம், மஹாகல்யாணகம், பஞ்சகவ்யம், ப்ராமஹீ போன்ற ஆயுர்வேத நெய் மருந்துகளின் அளவான உள் சேர்க்கையால் வாததோஷத்தின் கோபத்தை அடக்குவதால் மன பயம் தானாகவே குறைந்துவிடும்.

வாயுவால் பீடிக்கப்பட்டிருக்கும் நிலையில் கருங்குறிஞ்சி, தேவதாரு மற்றும் சுக்கு ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் சஹசராதி காயத்தை ஐந்து, பத்து சொட்டு க்ஷீரபலா101 எனும் மருந்தைக் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர விருப்பம்போல் விரைவாகவோ, மெதுவாகவோ நடக்க இயலும் என்று அஷ்டாங்கஹ்ருதயம் எனும் ஆயுர்வேதநூல் கூறுகிறது.

சிறுநீர்ப் பையின் அருகேயுள்ள புரஸ்தோலக்ரந்தியின் வீக்கத்தின் காரணமாக இரவில் அடிக்கடி சிறுநீர் வெளியேறக்கூடும். சிறிது வேப்பெண்ணெய், கடுகெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் சம அளவில் கலந்து இரும்புக் கரண்டியில் சூடாக்கி சிட்டிகை உப்பிட்டு இளக்கி, வயிற்றின் அடிப்பகுதியில் தேய்த்து அரை முக்கால் மணி நேரம் ஊறிய பிறகு, சூடான தண்ணீரில் குளித்து வர வீக்கம் விரைவில் வடிந்து இரவில் சிறுநீரின் அதிக அளவு போக்கானது குறைந்து விடும்.

பொதுவாகவே, வாயுவின் சீற்றம் நாடிநரம்புகளில் வயோதகத்தில் கூடும் என்பதால், தலைக்கு க்ஷீரபலா தைலம் வெதுவெதுப்பாகத் தடவி சிறிது நேரம் ஊறிய பிறகு வெந்நீரில் குளித்து வருவது நல்லது. ராஸ்னாதி சூரணத்தை உச்சந் தலையில் தேய்க்க வேண்டும். அனுவாசனம் எனும் எண்ணெய் வஸ்தி (எனிமா) சிகிச்சைமுறையை ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் செய்து கொண்டால் உடலில் ஏற்பட்டுள்ள உபாதைகள் குறைவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.


நெய் கலந்த பருப்பு கஞ்சி, நெய் சேர்த்த பால் சோறு, எள்ளும் அரிசியும் கலந்து தயாரித்த கஞ்சிகள், இனிப்பும் புளிப்பும் உப்பும் விகிதமான அளவில் கலந்த உணவுப் பொருட்கள் முதியோர் சாப்பிடவேண்டிய உணவு வகைகளில் மேன்மையானவை.

### சுலப வைத்தியம்

இருதயம் பலம் பெற: நன்றாகப் பழுத்த நெல்லிக் கனியில் ஒன்றை தினசரி தின்றுவிட்டு, தேக்கரண்டி அளவு தேனையும் சாப்பிட வேண்டும். தொடர்ந்து நாற்பது நாட்கள் சாப்பிட்டு வந்தால் இருதயம் பலம் பெறும், நல்ல இரத்தம் உண்டாகும்.

உடல் சூடு தணிய: பருப்புச் சேர்த்த அத்திக்காய் பதார்த்தத்தை தொடர்ந்து பதினொரு நாட்கள் வரை சாப்பிட்டு வந்தால், உடல் சூடு தணிந்து, படிப்படியாகச் சமநிலைக்கு வந்துவிடும்.

(செலவில்லாத சுலப வைத்தியம் நூலிலிருந்து.)



யாழ்.மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் உலக காசநோய் தினநிகழ்வு நேற்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றபோது அதில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஆர்.யுட் மங்கள விளக்கேற்றுவதையும் வைத்திய கலாநிதி இ.மணிவாசகன் தலைமையுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

படங்கள்-ஆர்.இராஜகுமார்

## பான்ஏசியா வங்கி யாழ்.கிளை 4 ஆண்டுகள் பூர்த்தி விழா



(யாழ்ப்பாணம்)


பான் ஏசியா வங்கி யாழ். கிளையின் 4 ஆண்டுகள் பூர்த்தி விழா கடந்த 18 ஆம் திகதி ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வங்கி அலுவலகத்தில் இடம்பெற்றது.

4ஆம் ஆண்டு நிறைவு விழா வானது மதகுருமார்களின் ஆசியுடன் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் வங்கியின் முகாமையாளர், ஊழியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட மேற்படி பான் ஏசியா வங்கியின் யாழ். கிளையில் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம், மருத்துவக் காப்பீட்டுடன் கூடிய நிலையான வைப்பு, டைன்னடானியம் கறுப்புக் கடனட்டை மற்றும் வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்ற சேவைகளை வழங்கி வருகின்றது.

## ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிராக வழக்குத்தொடர முடியாது

### உயர்நீதிமன்றம் அறிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகளுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது

ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவை பணி நீக்கி, மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை ஓர் அடிப்படை உரிமை மீறலாகும் என பாக்கியசோதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்ற மனுவிற்கு சட்ட மா அதிபர பாலித பெர்னாண்டோ முன்னர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.இந்த எதிர்ப்பினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

நீதியசரசர் சலீம் மர்சூக்கின் தலைமையிலான நீதியரசர் குழு இந்த மனுவை விசாரணை செய்து தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதன்போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு வழக்குத் தொடர முடியாத வகையிலான வரப்பிரசாதம் காணப்படுகின்றது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாட்டின் அரசியல் சாசனத்தின் 35ஆம் சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு குற்றச் செயல்களின் போது தண்டனை விதிக்க முடியாத விசேட வரப்பிரசாதம் காணப்படுகின்றது.மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் டாக்டர் பாக்கியசோதி சரவணவமுத்துவினால் ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## கனகராயன் குளம் ம.வி வளாகத்தில் ஷெல் மீட்பு



கனகராயன் குளம் மகா வித்தியால வளாகத்திற்குள் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட் கப்பட்டுள்ளதாக கனகராயன் குளப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வித்தியாலயத்தில் மகிந்தோதய திட்டத்தில் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடம் அமைப்பதற்காக அத்திவாரக் கிடங்கு வெட்டும் போது, 3 அடி ஆழத்தில் மேற்படி ஷெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தினர் தமக்குத் தெரியப்படுத்தியதினைத் தொடர்ந்து, இராணுவத்தினரின் உதவியுடன் ஷெல்லினை மீட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## துவிச்சக்கர வண்டி திருடனுக்கு விளக்கமறியல்



தென்மராட்சி பிரதேசத்தில் நீண்ட காலமாக துவிச்சக்கர வண்டிகளை திருடி வந்த சந்தேக நபரை எதிர்வரும் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் சிறிநிதி நந்தசேகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் தோட்டம் செய்யும் விவசாயி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தனது சைக்கிளை வீதியோராமாக நிறுத்தி விட்டு தோட்டத்திற்கு சென்று பயிர்களுக்கு நீர் இறைந்துள்ளார்.

அந்தச் சமயம், குறித்த நபர் துவிச்சக்கர வண்டியின் பூட்டினை திறந்து எடுத்துக்கொண்டு சாவகச்சேரி டச்சு வீதியில் சென்ற வேளையில், அங்கு தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவன் தனது தந்தையின் துவிச்சக்கரவண்டியென அவதானித்து விட்டு, குறித்த நபரை மறித்து விசாரித்துள்ளார்.

திருடன் சொல்வதறியாது தடுமாறவே அங்கு நின்றவர்கள் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் குறித்த நபரை விசாரித்த வேளையில், குறித்த நபர் ஏற்கனவே பல துவிச்சக்கர வண்டிகள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

குறித்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நதிமன்ற நீதவான் முன்னிலையில ஆஜர்படுத்திய போது, நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.



அச்சுவேலி இடைக்காடு பாடசாலை வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதைக் காணலாம். (85)

## அலரிமாளிகையில் பிரியாவிடை சந்திப்பு

(கொழும்பு)

சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மாலைதீவு உயர் ஸ்தானிகர் ஹசைன் சிஹாப் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பிரியாவிடை பெற்றார்.

தமது சேவைக் காலத்தில் ஜனாதிபதி வழங்கிய ஒத்துழைப்புக்கு மாலைதீவு உயர் ஸ்தானிகர் நன்றி தெரிவித்தார். ஹசைன் சிஹாபின் காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகள் மேலும் பலமடைந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தரம் 6 - 8 வரையான மாணவர்களுக்கான விசேட ஆங்கில பயிற்சி

## Grade -8

### Test - 01

**Complete the adverbs from the adjectives**

| Adjectives | adverbs | Adjectives | adverbs |
|---|---|---|---|
| 1. Beauitiful | beautifully | 6. faithful | .................. |
| 2. Easy | ..................... | 7. happy | .................. |
| 3. Slow | ....................... | 8. kind | ................. |
| 4. Care ful | ....................... | 9. brave | .................. |

### Test-02

**Fill in the blanks with suitable adverbs**

(careful, happy, beauitiful, brave, angry, kind)

**Eg:**Mala danced beauitiful at the concert

1. you must cross the road ----------------------------------------------
2. children clapped their hands ----------------------------------------
3. the soldiers fought ---------------------------------------- in the battle
4. My father shouted ------------------------ at me for coming home late.
5. Geetha treated us ----------------------------------------------------

### Test-03

Complete the sentences by writing the adjective opposite in meaning

**Eg :** My car is new but Mathan's is old

1. Rama was early but kumar was. -------------------------------------
2. Men are fast workers but women are --------------------------------
3. I have an empty drink bottle but your is ------------------------------
4. Kashmir vally is Wet but the sahara desert is -------------------------
5. Velvet is ------------------------------------------ but stone is hard
6. oil power is -------------------------------- but hydro power is clean
7. Tea is ------------------------------------------but ice cream is cold
8. Mala is tall but stone is --------------------------------------------
9. A feather is light but stone is --------------------------------------
10. My mother is---------------------------- But my Grandmother is old

### Test-04

Fill in the blanks With correct pronown in brackets

**Eg :** This is my (1) bicycle

1. This is --------------------------------------------------- (you) pen
2. He is riding --------------------------------------- (he) motor cycle
3. That is ----------------------------------------------------- (she) saree
4. Today is ------------------------------------------------ (she) birthday
5. Where is ------------------------------------------------ (you) ticket?
6. There is milk in the cat's bowl, There is milk in --------------- (it)bowl
7. I am writing ------------------------------------------------- (I) name.
8. she is----------------------------------------- (we) english teacher.
9. This is her photograph, That is-------------------------------------- 1)
10. This is not my umbrella.It is ------------------------------------ (he)

### Test -05

Fill in the blanks With suitable preposition

(from, for, of, to, on)

1) Break fast is the main meal---------------------------------- the day
2) I love to garden ------------------------------------------------ sundays.
3) The library Will be open ---------------------------- 9.a.m to 2.00 p.m
4) My uncle Wanted to go -------------------------------the police station.
5) I have some special news----------------------------------- you today.

### Test-06

Write the meaning for the following Words, select the meaning from the box.

| Words | | meaning |
|---|---|---|
| 1. Hike | = | ------------------- |
| 2. chores | = | ------------------- |
| 3. slump | = | ------------------ |
| 4. Grown | = | ------------------ |
| 5. fabulous | = | ------------------ |

A long Walk for pleasure
Extremely beauitiful
an unpleasant task you must do
fall suddenly
you cry in pain

### Test -07

**Match A With It**

| A | B |
|---|---|
| supply | short and fat |
| Tilling | deliver |
| Disease | pulling |
| Hauling | prepare the land for crops |
| pudgy | stck |

### Test-08

Write the question Words to get their answers.

**Why, When, How, What, Who**

1. ---------------------------------------------------------- is that girls?
2. ----------------------------------------------Will you go to the shop?
3. ----------------------------------------- are the synptoms of dengue fever? The symptoms are headache vomiting and join pains.
4. ----------- can you climinate the mosquito breeding? clearing leaves and stagnant Water from drains.
5. ---------------------------------is the dog Wet? Because it fell into river.

### Test -09

Read the notice and record the information in the grid.

**Notice**

The prize giving of the college will be held on 23rd March 2014 at.9.00 a.m., in the school auditorium.the chief quest Will be Mr.Ramanan zonal education officer. the students are expected to be in the auditorium before 8.45a.m

***The organizing committee Mirisa M.v.15th march 2014.***

| | |
|---|---|
| massage | : ............................................ |
| To Whom | : ............................................ |
| By Whom | : ............................................ |
| Venue | : ............................................ |
| Date | : ............................................ |

### Test-10

Write an essay any of ths following

(1) Importance of breakfast
(2) My hoppy
(3) Advantages of reading

# Grade -6

## part 1

**Teat -01**

**Find the Words in the boxes.**
**Eg:** celbyic = bicycle

1) tekcits = ----------------------------------------------
2) roftalpm = ----------------------------------------------
3) ralam = ----------------------------------------------
4) oteafyr =.----------------------------------------------
5) emicnide =----------------------------------------------

**Test -02**

Complete the following sentences With the verbs given below

**run, swim, dress, crows, starts, hear, getup, go, run, study**

1) I ---------------------------------------- at 5 O'clock in the morning.
2) she can ---------------------------------------------- across a river.
3) We ---------------------------------------------- to school by bus.
4) the factory ------------------------------------ At eight in the moring.
5) vithja and Rama. ---------------------------------- in the same class.
6) We can. ------------------------------ the Whistle ot the train in the silence of the morning.
7) The cock------------------------------- at 4 O; clock in the morning.
8) Buses ---------------------------------- Every fifteen in the morning.
9)I will ---------------------------------------------------- his Wound.
10)I can ---------------------------------------------------------- fast.

**Test-03**

**Fill in the blanks With suitable preposition.**
**on, by, in, at, from**

1. I go to school -------------------------------------------- van
2. It live.--------------------------------------------- sriLanka.
3.she comes to school----------------------------------bicycle.
4. It starts.-----------------------------5 O' clock in the moring.
5. He is ---------------------------------------------- jaffna

**Test-04**

**Re-write the folowing sentences using contractions.**
**Eg:-** I do not play cricket.
I don't play crickst.

1. she does not come to school by bus.
------------------------------------------------------------------
2. They have just gone out.
------------------------------------------------------------------
3. I am thirsty.
------------------------------------------------------------------
4.It is a hospital.
------------------------------------------------------------------
5. she cannot skip Well.
------------------------------------------------------------------

**Test-05**

**Complete the phrases Which describe the things in the first aid box.**

1. pair of ---------------------------
2. Bottle of --------------------------
3. Roll of ---------------------------
4. Tupe of --------------------------
5. some ----------------------------

| |
|---|
| plaster |
| antisepttic cream |
| scissors |
| spirit |
| bandages. |

**Test-06**

**Read the following article and answer the question given below**

My name is Kumaran. I am in grade six. I study at jaffna Hindu college. I go to school on my bicycle. My father is a teacher.He teaches English literature to the students. My leisure time activity is gardening.My father helps me a lot in my hoppy. I have a sister.she is in gradeone. We celebrated my 11th birthday last month, I live happily.

1.Write a suitable title to the article.
------------------------------------------------------------------
2.Who Worte this article?
------------------------------------------------------------------
3. Where does he study?
------------------------------------------------------------------
4. How old is he?
------------------------------------------------------------------
5. Who helps the Writfe in gradening?
------------------------------------------------------------------

**Test-07**

**Write the times in the example one.**

**3.30 = It's three thirty.**
**= It's hair past three.**

5.30 = -----------------------------------
= -----------------------------------
01.15 = -----------------------------------
= -----------------------------------
10.45 = -----------------------------------
= -----------------------------------
12.50 = -----------------------------------
= -----------------------------------
6.35 = -----------------------------------
= -----------------------------------

**Test -08**

**Put the following in the correct columns.**

Relay, Weight lifting, swimming, volley ball, long jump,cricket. football, javelin, netball, hurdies

| Individual events | Team events |
|---|---|
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |
| ........................ | ........................ |

**Test-09**

put the jumple Words into meaningful sentences.
**Eg:** Mala/ well/swim/can
Mala can swim Well.

1. The men/pit/a shallow/dig
2. I/in/swim/river/the
3.She/list/make/a/can
4. They/sand/fresh/put
5. His/starts office/eight/at

**Test-10**

Write an essay any of the following.
(1) My pet
(2) My friend
(3) My favourite game.

# I.C.T

1) கணனியின் மூளை என அழைக்கப்படுவது எது?
2) Recycle bin என்றால் என்ன?
3) C.P.U வில் அதிகளவான தகவல்களை சேமிக்கப் பயன்படும் வன்பொருள் எது?
4) W.W.W. என்பதன் விரிவாக்கம் என்ன?
5) RAM இன் விரிவாக்கம் என்ன?
6) 2 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய பொருள் என்ன?
7) 3 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய மொழி என்ன?
8) 1 ஆம் தலைமுறையில் உள்ளீடாகப் பயன்படுத்திய மொழி என்ன?
9) உள்ளீட்டுக் கருவிக்கு உதாரணம் தருக?
10) தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தின் விரிவாக்கம் என்ன?
11) கணனியின் வேகம் அளக்கப் பயன்படும் அலகு என்ன?
12) CD என்பதன் விரிவாக்கம் என்ன?

# முஸ்லிம்களின் விபரக்கொத்து மலர்வெளியீடும் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண முஸ்லிம்களின் விபரக் கொத்து மலர் வெளியீடும் பாராட்டு விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தளம் ஐ.பி.எம். மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வு யாழ்ப்பாணம், முல்லைத தீவு, வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம், மாத்தளை, கண்டி, மாவனல்லை, சிலாபம், புத்தளத்தில் வசிக்கும் யாழ். முஸ்லிம்களுக்குரியதாகும்.

கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பில் வசிப்பவர்களுக்கு பிறிதொரு தினத்தில் பாராட்டு விழா நடைபெற விருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளியிடப்படவுள்ள மலரில் யாழ்ப்பாணத்தில் பிறந்து வாழ்ந்து மறைந்த கல்விமான்கள், தொழில் அதிபர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோரின் விபரங்களுடன் தற்போது வாழ்ந்து வரும் புத்திஜீவிகள், சாதனையாளர்கள், அரச உயர் பதவி வகிப்போர் மற்றும் பிரமுகர்களின் விபரங்கள் அடங்கப்பட்ட ஓா பொக்கிஷமாகுமென அறியப்படுகின்றன.

இந் நூலுக்குரிய ஆக்கங்களை வழங்கியவர்களும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டியவர்கள், சமூக சேவையாளர்கள், சாதனை புரிந்தவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (105)

# கீரிமலை சிவபூமி மடத்தின் யாத்திரிகர் விடுதி திறப்பு விழா

(திருநெல்வேலி)

கீரிமலை சிவபூமி மடம், யாத்திரிகர் விடுதி புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேல்மாடி முழுவதையும் மனிதநேய மாமாயி திரு.திருமதி வி.கைலாசபிள்ளை குடும்பத்தினர் உபயமாக நிறைவேற்றிக் கொடுத்துள்ளனர். மேல்மாடியில் தமிழர்களின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் புகைப்பட ஓவியக்கூடமும், விசேட வசதிகள் கொண்ட விருந்தினர் விடுதியும் அமைக்கப்பட்டுள்ளன.

வடபுலத்து மக்களின் புண்ணிய தலமாக விளங்கும் கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் சிவபூமி மடம் உருவாக்கப்பட்டுக் கடந்த 2012 ஆம் ஆண்டு தைத்திங்கள் 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கீரிமலைக்கு யாத்திரை மேற்கொள்ளும் தூர இடத்து அடியார்கள் தங்கியிருக்கக்கூடிய நவீன வசதிகளைக் கொண்ட யாத்திரிகர் விடுதி அமைக்கப்பட்டுள்ளதுடன் அன்னதானப் பணியும் குறைவில்லாமல் நிறைவாக இங்கு நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (137)

# இலங்கை வங்கி கிளைக்கான புதிய கட்டடத் திறப்பு விழா

(வடமராட்சி)

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளைக்கான புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டி.எம்.குணசேகர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வங்கிக் கிளையை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் ஏச்.எம்.முடியான்சே, கௌரவ விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேசசெயலர் ச.சிவஸ்ரீ. நெல்லியடி வர்த்தக சங்க உப தலைவர் எஸ்.அகிலதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

3 மாடிகள் கொண்ட இக்கட்டடத்தில் முகாமையாளர் தங்குமிட வசதி, பாதுகாப்பு பெட்டகம் அடங்கிய தொகுதியும் பல வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடப்பரப்பையும் கொண்டமைந்துள்ளது. (109)

# திரைப்பட நடிகர் ஜெய் ஆகாஷ் யாழ். மத்திய கல்லூரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திரைப்பட நடிகர் ஜெய் ஆகாஷ் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இவருடன் தென்னிந்திய திரைப்பட நடிகர் கல்லூயின் பிரதி அதிபர் பி.பாலபவன் உப அதிபர் எம்.மரியதாஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

தொடர்ந்து கல்லூரியின் தமிழ்ச்சங்க பொறுப்பாசிரியர் நாக.தமிழேந்திரன், நாடக மன்ற சிரேஷ்ட பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன், கலைமாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் சி.தங்கரூபன் ஆகியோருடன் கலந்துரையாடலை அவர்கள் மேற்கொண்டதுடன் கல்லூரியின் நாடகத்துறை மாணவர்களையும் சந்தித்து நாடகத்துறையின் இன்றைய கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளினை கல்லூரியின்



இந்து மன்றப்பொறுப்பாசிரியர் பி.பிருந்தாபன் மேற்கொண்டிருந்தார். நடிகர் ஜெய் ஆகாஷ் யாழ்ப்பாணத்தின் தாவடி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் இந்தியாவின் தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் கதாநாயகனாக நடத்த புகழ்பெற்ற நடிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் றோஜாவனம், ரோஜ கூட்டம், திறிறோசஸ் , ராமகிருஷ்ணா, கிச்சா வயசு பதினாறு, அடடா என்ன அழகு, ஆயுதப்போராட்டம், ஒதிகை, ஆனந்தம் ஆரம்பம் ஆகிய தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

சினி எக்ஸ்பிரஸ் அவாட் சிறந்த நடிகருக்காகவும், வஸ்மி பிலிம் அவாட் சிறந்த புதுமுக நடிகருக்காகவும், என்.ரி.ஆர் பிலிம் அவாட் சிறந்த நடிகருக்காவும், ஆந்திரா சினி அவாட் சிறந்த நடிகருக்காவும், சந்தோசம் அவாட் சிறந்த துணை நடிகருக்காகவும், நந்தி அவாட் சிறந்த குணச்சித்திர நடிகருக்காவும் விருதுகளினைப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. (63)




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இன்று புதன்கிழமை ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் கந்தபுராணப் படிப்பு பூர்த்தியின் இறுதி நாளான மகேஸ்வரபூசையும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

## மயிலிசிட்டி வீதியை புனரமைக்க கோரிக்கை

பருத்தித்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட சந்தாதோட்டம் மயிலிசிட்டி வீதியைத் திருத்திப் புனரமைப்புச் செய்யு மாறு அப்பிரதேச மக்கள் பருத்தித்துறைப் பிரதேசசபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இம் மயிலிசிட்டி வீதி திருத்திப் புனரமைக்கப்படாமையால் இவ் வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் மிகுந்த சிரமங்களை அனுபவித்துவருகின்றனர் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (01)



யோ.கர்ணனின் கொலம்பஸின் வரைபடங்கள் நூலிற்கான அறிமுகமும் கலந்துரையாடலும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைக்கோட்டத்தில் நடைபெற்றபோது... (63)

# ஐரோப்பாவை எச்சரிக்கும் ரஷ்யாவின் நடவடிக்கை

## ஒபாமா சீற்றம்



கிரைமியாவை ரஷ்யா இணைத்துக்கொண்டதால் பதற்றம் எழுந்துள்ள போதிலும், ஐரோப்பாவை கீழை மற்றும் மேலை நாடுகளின் போர்க்களம் என்று நான் கருதவில்லை என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தின் ஆம்ஸ்செற்ராம் நகருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்ற ஒபாமா, அந்நாட்டின் "டி வோல்க்ஸ்க்ராந்த்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

ரஷ்யாவின் நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளை எச்சரிப்பதாக உள்ளது. ஆனால், ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த சில தலைவர்கள் ரஷ்யாவுடனான தங்களது பொருளாதாரம் மற்றும் எரிசக்தி உறவுகள் பாதிக்கப்படும் என்று கவலைப்படுகிறார்கள்.

உக்ரேன் மீதான தனது நடவடிக்கைகளால் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படும் விளைவுகளை புடின் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை ஐரோப்பிய யூனியன் தலைவர்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

ரஷ்யா தொடர்ந்து தனது நிலையை விரிவுபடுத்தினால், கூடுதல் பொருளாதாரத் தடை விதிப்பதற்கு நாங்கள் தயாராகும் அவசியம் ஏற்படும் என்றார்.

உலகச் செய்திகள்

# கடலில் விழுந்த விமானம் பற்றிய விபரங்களை கோருகிறது சீனா

(பீஜிங்)

காணமற்போன விமானம் கடலில் விழுந்து நொறுங்கியதாக மலேசிய பிரதமர் தெரிவித்துள்ள நிலையில் அவ்விமானம் விழுந்து நொருங்கியது பற்றி விபரங்களை மலேசிய அரசு வழங்கவேண்டும் என சீனா கோரியுள்ளது.

239 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்ற மலேசிய விமானம் இந்திய பெருங்கடலில் விழுந்து நொருங்கியதாக 17 நாட்களுக்கு பிறகு மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் நேற்று முன்தினம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதில் பயணம் செய்த அனைவரும் பலியாகி இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான விமானத்தில் பயணம் செய்தவர்களில் 158 பேர் சீனர்கள். எனவே விமானத்தை தேடும் பணியில் சீனா தீவிரம் காட்டி வந்தது. இந்த நிலையில் விமானம் இந்திய பெருங்கடலில் விழுந்து நொருங்கி மூழ்கியதாக அறிவிக்கப்பட்டதை ஏற்க மறுத்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவு மந்திரி ஸி ஹாங் ஷெங் கூறும்போது, "விபத்துக்குள்ளான விமானம் குறித்து பெறப்பட்ட விவரங்களை மலேசிய அரசு வழங்க வேண்டும்.மேலும் அதன் மூலம் விமானம் கடலில் விழுந்து நொருங்கி மூழ்கியது என்ற முடிவுக்கு எப்படி வந்தது என்றும் விளக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை விமானம் விழுந்துநொருங்கியதில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும். இந்த வகையில் 900 பேருக்கு நிதி உதவி வழங்கப்படும். என மலேசியன் ஏயாலைன்ஸ் உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# காற்று மாசுபடுவதால் உலகில் 7 மில்லியன் பேர் உயிரிழப்பு

## உலக சுகாதார நிறுவனம் தகவல்

காற்று மாசடைவதன் காரணமாக உலகம் முழுவதும் 2012 இல் 7 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது.

மேலும் இதுகுறித்து இந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது. சுகாதார சீர்கேடு உலகம் முழுவதும் பரவி வருகிறது.

அதிலும் காற்று மாசுபடுவதால் வரும் ஆபத்து பெருகி வருகிறது. இதனால் இதய நோய், பக்க வாதநோய் அதிகமாக ஏற்படுகின்றன.

இந்த நிலை தெற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, கிழக்காசியாவில் உள்ள வளந்து வரும் நாடுகளில் மோசமாக உள்ளதகாவும் 3.3 மில்லியன் மக்கள் உட்புற காற்று மாசுபாட்டினாலும், 2.6 மில்லியன் மக்கள் வெளிப்புற காற்று மாசுப்பாட்டினாலும் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

# உட்கட்சி பிரச்சினையை தீர்க்க 40 கருணாநிதி வந்தாலும் முடியாது

## விஜயகாந்த் கிண்டல்

தி.மு.க.,வில், டி.ஆர்.பாலுவும், பழநி மாணிக்கமும் மோதி வருகின்றனர். இந்நிலையில் உட்கட்சி மோதலை தீர்க்க இனிமேல், 40 கருணாநிதி வந்தாலும் முடியாது, என, தஞ்சை பிரசாரத்தில் விஜயகாந்த் கிண்டலாக பேசினார்

பா.ஜ., வேட்பாளருக்கு, தஞ்சை சட்டசபையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் அக்கட்சி வேட்பாளர் யார்? என, அறிவிக்கவில்லை. தஞ்சையில், பனகல் கட்டடம் முன், தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த், அறிவிக்கப்படாத, பா.ஜ., வேட்பாளரை ஆதரித்து நேற்றுமுன்தினம் பேசியதாவது,

என் பிரசார வாகனம் நேற்று முன்தினம் முதல் பழுது ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்ய முடியவில்லை. இதனால், ஐ.ஜே.கே., கட்சி தலைவர் பச்சமுத்து தான், வாகனத்தை கொடுத்து உதவினார். தஞ்சை எனறாலே பெரியகோவில் நினைவுக்கு வரும்.

"சோழநாடு சோறுடைத்து" என சொல்வர் ஒரு காலத்தில் மாநிலத்துக்கே சோறு அளித்த தஞ்சை தற்போது, மாவட்டத்துக்கே உணவளிக்க முடியாமல் தவிகிறது. ஆக நான் சொல்றது இதுதான். தஞ்சை முப்போகம் விளைந்த பூமி, ஒரு போகமே விளையவில்லை. இதறகு காரணம் தண்ணீர் இல்லை.

தென்னை மரத்தில் இளநீரை இறக்கும் விவசாயி முகத்தில், கண்ணீரை தான் காண முடிகிறது. விவசாயத்துக்கும் தண்ணர் இல்லை. குடிப்பதற்கும் தண்ணீர் இல்லை. இது, எந்தநேரமும் ஹெலிகொப்டரில் பறக்கும் ஜெயலலிதாவுக்கு தெரியாது இவ்வாறு விஜயகாந்த் பேசினார்.

# மோடி - நாகர்ஜுனா சந்திப்பு



(புதுடில்லி)

தெலுங்கு படவுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான, நாக ர்ஜுனா பா.ஜ., பிரதமர் வேடபாளர் நரேந்திர மோடியை ஆமதாபாத்தில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

எனினும் அவர் அரசியல் பேசவில்லை எனத் தெரிவிததார்.

தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான நாகார்ஜுன் நேற்று முன்தினம் குஜராத் மாநிலம் ஆமதாபாத் சென்று முதல்வர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேசினார்.

இவர் மனைவி நடிகை அமலாவும் பா.ஜ.,வில் இணைய உள்ளதாக, நாகார்ஜுனாவுக்கு நெருக்கமான தகவல்கள் முன்னர் தெரிவித்தன.

மோடி சந்திப்பிற்கு பின் நிருபர்களை சந்தித்த நாகர்ஜுனா, நான் பா.ஜ.,வில் இணையப்போவதில்லை. மாநில வளர்ச்சி குறித்தும், குஜராத்தில் செய்யப்பட்டுள்ள வளர்ச்சி திட்டங்கள் குறித்தும், மோடியுடன் பேசினேன் என்றார்.

# அகதிகள் படகு மூழ்கி உகண்டாவில் 98 பேர் பலி

(கின்ஷாசா)

ஆபிரிக்க நாடான உகணடாவில் ஏரியில் படகு கவிழ்ந்து, 98 அகதிகள் உயிரிழந்தனர். ஆபிரிக்காவின் பெரும்பாலான நாடுகளில் உள்நாட்டு சண்டை நடக்கிறது. இதனால் பல இலட்சம் மக்கள் அயல் நாடுகளின் தஞ்சம் அடைந்து வருகின்றனர். காங்கோ நாட்டில் பல ஆண்டுகளாக உள்நாட்டு சண்டை நடப்பதால், அங்குள்ள மக்கள் பலர் உகண்டா நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

உகண்டாவிற்கும், காங்கோவுக்கும் இடையே, "ஆல்பர்ட்" என்ற பெரிய ஏரி உளளது.

இந்த ஏரியை கடக்க, காங்கோ நாட்டைச் சேர்ந்த, 250 அகதிகள் இரண்டு படகில் உகண்டாவில் உள்ள அகதி முகாமிலிருந்து கடந்த 22 ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற போது, இந்த விபத்து நடந்துள்ளது. இதுவரை 98 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன 41 பேர் உயிருடன மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை தேடும் பணி நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எகிப்தில் ஒரே நாளில் 529 பேருக்கு மரண தண்டனை

(கெய்ரோ)

எகிப்தின் முன்னாள் அதிபர் முகமது மோர்சி ஆதரவாளர்கள் 529 பேருக்கு மரணதண்டனை விதித்து, அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்ற தவறியதால் எகிப்து நாட்டு அதிபர் முகமது மோர்சிக்கு எதிராக போராட்டம் நடநதது.

இதனால், இராணுவத்தால் அவரது பதவி பறிக்கப்பட்டது. இதற்கு கண்டனம் தெரிவித்து மோர்சியின் ஆதரவாளர்கள் தலைநகர் கெய்ரோவில் வன்முறையில் ஈடுபட்டனர். இதில் பொலிஸார் உட்பட நூற்றுக் கணக்கானோர் பலியாகினர்.

இது தொடர்பாக எகிப்தின் மின்யா நீதிமன்றத்தில் 545 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் 16 பேரை விடுவித்த மின்யா நீதிமன்றம், 529 பேருக்கு மரண தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

ஒரே நாளில் 529 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# குற்றவாளிகளை விடுவிப்பதற்கு தமிழக அரசுக்கு அதிகாரமில்லை

## இந்திய மத்திய அரசு



ராஜீவ் கொலையாளிகளை விடுவிப்போம் என தமிழக அரசு கூறுவது தவறு, தமிழக அரசுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை என்று மத்திய அரசு நேற்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தது.

ராஜீவ் கொலையாளிகளை விடுவிப்போம் என்று தமிழக அரசு தெரிவித்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்திருந்தது. ராஜீவ் கொலையாளிகளின் தூக்குத்தண்டனை ஆயுட் தண்டனையாகக் குறைக்கப்பட்டு சிறப்பு நீதிமன்றம் அறிவித்த நிலையில், அவர்கள் தங்கள் மீதமுள்ள வாழ்நாளை சிறையில்தான் கழிக்க வேண்டும் என்று மத்திய அரசு கூறியது. மேலும், இந்த வழக்கில் கொலையாளிகளை மன்னித்து விடுவிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை என்றும், இதற்குக் காரணம், மன்னிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது என்றும் தனது பதில் மனுவில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# மீள் குடியமர்ந்த மக்களுக்கு மின்சாரம்;
# வடக்கின் வசந்தம் அமுலாகிறது




(சுழிபுரம்)

வலிகாமம் பகுதியில் உள்ள நான்கு மீள்குடியேற்ற கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள காட்டுப்புலம் கிராமத்துக்கும், வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளவெட்டி மணப்புலம் என்ற கிராமத்துக்கும், அளவெட்டிவடக்கு தேர்விட்டி என்ற கிராமத்துக்கும் மற்றும் அபிராமி கோயிலடி என்ற கிராமத்துக்கும் மிக விரைவில் மின்விநியோகம்மேற்கொள்ளப்பட விருக்கிறது.

மீள்குடியேற்ற கிராமங்களான இந்த பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் இதுவரை மின்சார வசதி இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இப்போது வடக்கின்வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் இந்த கிராமங்களுக்கான மின்சாரத்தை விநியோகிப்பதற்கு துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறன.

# கெட்டுப்போகும் சுற்றுச்சூழல்
# யாழ். செயலகத்தில் அவசர மாநாடு



(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் மற்றும் புதுப்பித்தல் சக்தி அமைச்சின் அதிகாரிகள் யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட சூழல் மாசடைதல் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ். செயலகத்தில் அவசர மாநாடு ஒன்று நடைபெற்றது.

யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினிவரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் சுற்றாடல் மற்றும் புதுப்பித்தல் சக்தி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2013ஆம் ஆண்டு வடமாகாணம் தழுவிய ரீதியில் கிளிநொச்சியில் நடைபெற்ற இவ்விடயம் சம்பந்தமான மாநாட்டில் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டதுடன் இவை குறித்து வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் ரீதியாகத் தீர்வுகாணும் செயன்முறைத்திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் 2014ஆம் ஆண்டிலேயே மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் முல்லைத்தீவிலும் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலும் கலந்துரையாடல் நடை பெற்றுள்ளது.

முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்தக் கூட்டத்தில் எந்தெந்த சுற்றாடல் பிரச்சினைகளுக்கு எந்தெந்தத் திணைக்களங்கள் பொறுப்பெடுத்து தீர்வுகாணுவது சம்மந்தமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் மூலமாக வடமாகாணத்தில் உள்ள சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## 13ஆம்...

ளுக்கான சேவைகளையும் முன்னெடுக்க வேண்டும். ஆனால், தேர்தலில் வெற்றிபெற்றவர்களால் மக்களுக்கான சேவைகள் எவையும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளது.

இதனால், வாக்களித்த மக்கள் தாம் தற்போது ஏமாற்றப்பட்டு வருவதாக விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் எதிர்காலங்களில் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்போரை எமது மக்கள் இனம்கண்டு அவர்களுக்கு தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

அப்போதுதான் மக்களது வாழ்வாதாரம் மட்டுமல்லாது அவர்கள் சார்ந்து வாழுகின்ற சமூகங்களும் முன்னேற்றம் காண முடியும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொள்ள வேண்டுமென நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தபோதிலும் அதனை எதிர்த்தவர்கள் இன்று ஆதரிக்கும் நிலையே காணப்படுகின்றது.

இன்று அமெரிக்காவும் ஜெனிவாவும் கூட 13 ஆவது திருத்தச் சட்டம் தான் சரியென ஏற்றுக் கொள்ளும் நிலைதோன்றியுள்ளது.

இந்தநிலையில், எமது பிரச்சினைக்கு நாமே தீர்வு காண வேண்டுமென்பதே யதார்த்தமாகுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே ஒருநாட்டின் தேசியப் பாதுகாப்பு என்பது அந்த நாட்டில் வாழுகின்ற மக்களை வென்றெடுக்கக் கூடிய வகையிலேயே அமையப் பெற வேண்டும். என்பதுடன் குறித்த இவ்விடயத்தை தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தெரியப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன்போது பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் இடர்பாடுகள், தேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் ஈ.பி.டி.பியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ், உதவி அமைப்பாளர் சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

# மூன்று பிள்ளைகளையும் சுட்டுக்கொன்றது புலிகளே

## ஆணைக்குழு முன் தந்தை சாட்சியம்

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் நடந்தவண்ணம் உள்ள நிலையில் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு தேவபுரத்தைச் சேர்ந்த வீரபத்திர ஏரம்பமூர்த்தி, தனது 45, 29 மற்றும் 27 வயதான மூன்று மகன்களை புலிகளே கொலை செய்ததாக குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஏரம்பமூர்த்தி குறிப்பிடுகையில் 45 வயதான தனது மகன் இராணுவத்தில் இருந்தபோது இராணுவத்துக்கு புலிகள் தொடர்பான தகவல்களை வழங்குவதாக கூறி புலிகள் அவனை சுட்டுக் கொன்றதாக குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் 45 வயதான தனது முதல் மகனை 1985.10.10 அன்று புலிகள் சுட்டுக் கொன்றதாகவும் இரண்டாவது மகனை 1992.11.30 அன்று கொன்றதாகவும் குறிப்பிட்டார். மேலும் அவரது முதல் மகன் இராணுவத்தில் இருந்து விடுமுறைக்காக மாத்தளை வந்தபோது கண்டியில்வைத்து புலிகள் அவனைக் கடத்தி மட்டக்களப்புக்கு கொண்டு சென்று சுட்டுக் கொன்று அவரது உடலை வீதியில் வீசியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

## ஜெனிவாத்தீர்மானத்தை...

தைத் தாருங்கள்.

நீங்கள் அனைவரும் அறிந்த விதத்தில் சர்வதேச மட்டத்தில் எவருக்கும் மின்சாரக் கதிரையில் அமர்த்தி, தண்டனை வழங்கப்படவில்லை.

இரண்டாவது விடயம் என்னவென்றால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையொன்றே முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, அதன்படி செயற்பட வேண்டிய கட்டாயம் இல்லை. ஏதாவது ஒரு விடயத்தை உறுதியாக செயற்படுத்த வேண்டும் என்பதனை கூறக் கூடிய நிறுவனம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையாகும்.

2014 ஆம் ஆண்டு ஜெனிவா அமர்வில் இதுவரை நாம் எதிர்கொள்ளாத பாரியளவிலான சவாலொன்று விடுக்கப்படுகின்றது.

இலங்கையின் ஜனநாயகம் கருதி செயற்படுகின்ற பிரஜைகள் என்ற வகையில், இதனை அறிந்து கொண்டு எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

இல்லாவிட்டால், நாம் தொடர்ந்தும் அடிமைப்பட்டவர்களாகவே இருப்போம். சிவில் சமூகத்தை முடக்குவதற்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிவில் சமூகம் என்ற வகையில் நாம் எம்மிடமே வினவ வேண்டிய கேள்வியொன்று உள்ளது. உண்மையிலேயே இந்த போட்டி முடிவடைந்து விட்டதா?

இல்லாவிட்டால், நாம் செய்யும் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுவதனால் எமது கடமைகளை தொடர்ந்தும் நிறைவேற்றுவதா?

என்று சிந்திக்க வேண்டும் என்றார் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.

## நாம் அரசுடன்...

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் எனவும் மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு இன்றி பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைமைத்துவம் இன்னமும் தீர்மானிக்கவில்லை எனவும், மாகாணசபை உறுப்பினர்களினால் மட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளின் போது தென் ஆபிரிக்காவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் முடியாவிட்டால் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிமன்றம்...

எடுக்கச் சென்ற சிறுவர்கள் குறிப்பிட்ட கைக்குண்டு காணப்பட்டது தொடர்பாக தகவல் வழங்கியதை அடுத்து இது தொடர்பாக பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். (25)

## "நவி"...

இதற்கமைய ஒரு வருடக் காலப்பகுதிக்குள் விசாரணை அறிக்கையை மனித உரிமை பேரவை அமர்வில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று யோசனையில் கோரப்பட்டுள்ளது.

## வாள்...

இட்டவேளை அவரிடம் வாள் ஒன்று இருக்கக்காணப்பட்டதனை அடுத்து அவரை இராணுவத்தினர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்க அவரைக்கைது செய்த பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து அவர் 'ஆவா' குழுவைச் சேர்ந்தவர் என்று தெரியவந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவரை யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,இ)

## வட்டுக்கோட்டையில்...

வட்டுக்கோட்டையில் குற்றச் செயல்கள் பலவற்றுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இந்தச் சந்தேகநபர் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில், மேலதிக விசாரணைக்களுக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

## புதுக்குடி...

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கந்தனாலயன் என்றழைக்கப்படும் மாணிக்ககாந்தன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## வடக்கில்...

நிலை அதிகமாக காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஏறக்குறைய 35 டிக்கிரி வெப்பநிலை காணக்கூடியவாய்ப்புகள் காணப்படுவதாகவும், கடந்த ஞாயிறன்று 33.9 டிகிரியும், நேற்று முன்தினம் 34.6 டிகிரியும் பதிவாகியுள்ளன. இதனடிப்படையில் வெப்பநிலை அதிகரிக்க கூடிய நிலை காணப்படுவதாகவும அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஜெனிவா...

சேர்ந்து கூட்டாட்சி நடத்தியவர் அவர்தான்.

அந்த மத்திய அரசு பல்வேறு மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டது. அதனைக் கருணாநிதி அப்போது தட்டிக்கேட்கவில்லை. மீனவர் பிரச்சினை, கச்சதீவுப் பிரச்சினை என ஏராளமான விடயங்கள் இருந்தன. இவற்றைச் சமாளிக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு. ஆனால் மத்திய அரசு அவற்றையும் கவனிக்காமல் தமிழக மாநில அரசின் அதிகாரத்தை நசுக்குவதில்தான் குறியாகவிருந்தது. தமிழகத்திற்கு துரோகம் இழைக்கும் வகையிலேயே அது செயற்பட்டது. இவ்வாறு தமிழக முதல்வர் மேலும் தெரிவித்தார்.

# வலி.மேற்கில் குடிநீர் விநியோகம்
# பாரிய செயற்றிட்டம் அவசியம்
## - சங்கானை மக்கள் கோரிக்கை-

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேசம் முழுவதுக்கும் சுன்னாகத்தில் இருந்து அல்லது பொக்கனையில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்தை தரும் பாரிய திட்டத்தை முன்வையுங்கள்.

நாம் நன்னீர் குடிதண்ணீர் இன்றி அல்லலுறுகின்றோம்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை இதற்கு நல்ல தீர்வை வழங்க வேண்டும் என சங்கானையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர க.கருணாகரன் தெரிவித்தார்.

மக்கள் பங்களிப்பு அபிவிருத்தித் திட்டம் நேற்று சங்கானை ஜே/178 கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மக்கள் நலன் புரிச்சங்கத் தலைவர் தெரிவிக்கையில்,

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவு 25 கிராம அலுவலர் பிரிவினைக்கொண்ட பரந்த பிரதேசம் இப்பிரதேசம் முழுவதும் உள்ள மக்கள் குடிதண்ணீருக்காக அல்லறுறுகின்றனர். ஆனால் எமது கிராமம் மட்டுமன்றி அனைத்து கிராம மக்களும் நன்னீர் குடிதண்ணீர் இன்றி ஏங்குகின்றனர்.

பிரதேச சபை ஒரு சில வீதிகளுக்கு மட்டுமே சேவை வழங்குகின்றது.

சபையானது இத்திட்டத்தினை முன்னெடுத்து சபைநிதியில முதலில் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

பின்னர் தான் வீதி, மதகு வேலைதொடர்பில் ஆராய வேண்டும் இரணைமடு குடிதண்ணீரத் திட்டம் வலுப்பெற்று இடம் பெறவேண்டும். இல்லாதுவிடில் சுன்னாகம் அல்லது பொக்கனையில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவந்து நிலத்தடி குழாய் மூலம் சங்கானை முதல் அராலி வரையும் அங்கிருந்து சுழிபுரம் மேற்கு வரையும் ஆக 25 கிராம அலுவலர் பிரிவிற்கும் முழுமையாக வழங்க முன்வர வேண்டும்.

இத்திட்டத்தினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு பிரதேச செயலர் பிரதேச சபை இணைந்து திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

இத்திட்டம் வெற்றியளித்தால் மட்டுமே மக்கள் பெரிதும் நன்மை அடையும் திட்டமாக மாறும்.

எனவே மக்கள் பங்குகேற்பு திட்டத்தில் வீதி, மதகுத்திட்டத்திற்கு மேலாக குடிதண்ணீருக்கு முதல் திட்டத்தை வைத்தால் அத்திட்டமே போதுமானதாகும் என்றார் தலைவர் கருணாகரன். (92)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அதிஉயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை மாசார், புதுக்காடு, பளை, இந்தியன் வீட்டுத்திட்டம், தருமக்கேணி, கோவில்வயல், மல்வில் ஆகிய இடங்களிலும்

நாளை வியாழக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை சண்டிலிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, இளவாலை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, சித்தன்கேணி, பண்ணாகம், வழக்கம்பரை, தொல்புரம், மாதகல், பொன்னாலை, மூளாய, காரைநகர், வேலணை ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை சரசாலை வடக்கு, மட்டுவில், கல்வயல், மந்துவில் ஆகிய இடங்களிலும்

29.03.2014 சனிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை நவக்கிரி, அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, செல்வநாயகபுரம், கைத்தொழில் பேட்டை, புத்தூர், ஆவரங்கால், நிலா வரை, சிறுப்பிட்டி மேற்கு, குட்டியப்புலம், சுகந்திரபுரம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன உயர் தேசியக்கணக்கியல், முகாமைத்துவப்பட்டதாரிகளின் நியமனம் வழங்குதல் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் இன்று பி.ப 2 மணிக்கு இடம்பெற இருப்பதால் அனைத்துப் பட்டதாரிகளை யும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# கரும்புச் செய்கையில் பயிற்சி;
# 20 விவசாயிகள் இந்தியாவுக்கு



(கொழும்பு)

பெல்வத்தை , செவனகலை ஆகிய சீனித்தொழிற்சாலைகளுக்கு சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொடுத்த கரும்புச்செய்கையாளர்கள் 20 பேர் மேலதிகப்பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கரும்புச்செய்கையில் அதிக ஆர்வமுள்ள கடந்த காலங்களில் சிறந்த அறுவடையைப் பெற்ற கரும்புச்செய்கையாளர்கள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே இவ்வாறு இந்தியாவுக்கு பயணமானவர்களாவர்.

இவர்களுக்கு இந்தியாவில் கரும்புச்செய்கை தொடர்பாக ஒருவாரகால பயிற்சி அளிக்கப்படும் .சீனிக்கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மண் செனவிரத்னவின் ஆலோசனையின் பேரிலேயே இவர்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கரும்புச்செய்கையில் அதிக ஆர்வமுள்ளவர்களை எதிர்காலத்திலும் இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சி அளிக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்தது.

# கள்ள நோட்டுக்கள் கையாளல்
# பிரேமதாசாவின் மகள் மீது விசாரணை




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசாவின் சகோதரியும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகளுமான துபாஞ்சலி மீது புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடாத்தியுள்ளனர்.

5000 ரூபா பெறுமதியான சுமார் 400 நாணயத் தாள்களை துலாஞ்சலி பிரேமதாசா வங்கியில் வைப்புச் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போலியான நாணயத் தாள்களை வைத்திருந்தமை தொடர்பில் இந்த விசாரணை கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. துலாஞ்சலியை பொலிஸார கைது செய்தனரா என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# உலகக் கிண்ண 20-20 கிரிக்கெட் போட்டி
# மேற்கிந்தியத் தீவுகளிடம் வீழ்ந்தது பங்களாதேஷ்



பங்களாதேஷில் நடைபெற்று வரும் ருவெண்ரி 20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 73 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனையடுத்து களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஸ்மித் 43 பந்துகளில் 72 ஓட்டங்களை எடுத்தார்.

இதில் 10 பௌண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடக்கம். இதனையடுத்து 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 19.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பத்ரி 4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக 72 ஓட்டங்களை விளாசிய ஸ்மித் தெரிவானார்.

# நம்பிக்கை மோசடி;
# மூவர் மீது வழக்கு
## வெளிநாட்டு மோகத்தால் விபரீதம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 15 இலட்சம் ரூபா மோசடி செய்த 3 நபர்களில் ஒருவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஹற்றன் மற்றும் கம்பளை பகுதியைச் சேர்ந்த நபர்கள் மூவரும் கடந்த 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள நபர் ஒருவருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 15இலட்சம் பண மோசடி செய்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் விஷேட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, கிளிநொச்சி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அநுராதபுரம சிறையில் கடந்த 3 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டாம் சந்தேக நபருக்கு யாழ். மேல் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வழக்கு நேற்றைய தினம் யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த நபரை 1 லட்சம் ரூபா சரீரப்பிணையுடன், 5 இலட்சம் பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் மாத இறுதி வெள்ளிக்கிழமையில் கையொப்பமிடுமாறும் உத்தர விட்டுள்ளார். (25,இ)

# நுகர்வோர் அதிகார சபை
# அதிகாரிகள் ஐவர் காயம்




(வவுனியா)

வவுனியா நுகர்வோர் அதிகாரசபையினர் பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளானதில ஐவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற வழக்கொன்றில் பிரசன்னமாகுவதற்காக வவுனியா மாவட்ட செயலகத்தின் வாகனமொன்றில் பயணித்த நுகர்வோர் அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி எம் ராஜபக்ச உட்பட ஐவரே காயமடைந்துள்ளனர்.

வழக்கு விசாரணைகள் நிறைவு பெற்றதன் பின்னர் வவுனியா நோக்கி வந்த சமயம் குறுக்கள்புதுக்குளம் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக வாகனத்தில் பயனம் செய்த ஐவரும் காயமடைந்து வவுவுனியா பொது வைத்திசாலையின் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.